# இந்தியக் குடிமக்களாகிய நாம்

## பாடநூல் - 2




குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி

வான்முகில்
திருநெல்வேலி

# இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை

## Preamble to the Constitution of India

### இந்தியக் குடிமக்களாகிய நாம்

**இந்தியாவை இறையாண்மை கொண்ட, சமன்மைமிக்க, சமயச் சார்பற்ற, சனநாயக, குடியரசாக அமைப்பதென உறுதி பூண்டுள்ளோம்.**

**இதன் மூலம் அனைத்து குடிமக்களையும் பாதுகாப்பதுடன்**

- சமூக, பொருளாதார, அரசியலில் அனைவர்க்கும் நீதி
- எண்ணியதை வெளிப்படுத்த, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, உண்மையைச் சொல்ல, வழிபாடு செய்ய சுதந்திரம்
- தகுநிலையிலும், வாய்ப்பிலும் சமத்துவம் அளித்து உயர்வுறச் செய்தல்
- தனி மனிதர்களின் மாண்பு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவத்தோடு வாழ்வது என்று உறுதி பூண்டுள்ளோம்.

**இந்திய அரசமைப்புச் சட்டத்தை**
**1949ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள்**
**நமது அரசியல் நிர்ணய அவையில்**
**ஏற்றுக்கொண்டு, இயற்றி,**
**நமக்கு நாமே வழங்குகிறோம்.**

குழந்தைகளுக்கான
அரசமைப்பு உரிமைக் கல்வி

பாடநூல் - 2

# இந்தியக் குடிமக்களாகிய நாம்

## WE, THE PEOPLE OF INDIA



**பாடநூல் உருவாக்கக் குழு**

முனைவர் இ. தேவசகாயம்
முனைவர் லெ. பெர்னாட்
வழக்கறிஞர் ம. பிரிட்டோ
வழக்கறிஞர் கா. கணேசன்

**பதிப்பு**

ஆகஸ்டு 2023

**வடிவமைப்பு**

சி. திருநாவுக்கரசு

**அச்சாக்கம்**

எழுத்துக் கலையகம், திருநெல்வேலி

**வெளியீடு**

**வான்முகில்**
15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல்
திருநெல்வேலி - 627011
தமிழ்நாடு

**தொடர்பு கொள்ள**

94426 18117 | 99943 68503

அரசமைப்பு உரிமைக் கல்வியைக் குழந்தைகளுக்கு முன்னெடுத்துச் செல்லும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியை எமது வான்முகில் அமைப்பு கடந்த மூன்று ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகிறது. ‘‘அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்’’ என்ற முழக்கத்தோடு, அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் மதிப்பீடுகளை வாழ்க்கைக் கல்வியாக வகுப்பறைகளிலும், விடுதிகளிலும், வீதிகளிலும், விளையாட்டுத் திடல்களிலும் குழந்தைகள் மத்தியில் கொண்டு செல்வதற்காக இப்பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதவெறியும் சாதிய வெறியும் தலைவிரித்தாடி மக்களைக் கூறு போடும் இன்றையச் சூழலில், இளம் தலைமுறையினருக்கு இக்கல்வியைக்கொண்டு செல்லவேண்டும் என்ற உன்னத நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. வெறுப்புப் பேச்சுகளும், பகைமை உணர்வுகளும், சகிப்பின்மையும், பாகுபாட்டு எண்ணங்களும் அதிகரிக்கும் இன்றையச் சூழலில், குழந்தைகள் மத்தியில் சனநாயக நெறிமுறைகளையும், சமத்துவ சிந்தனைகளையும் விதைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. அரசமைப்பு முகப்புரையில் பொறிக்கப்பட்டுள்ள உயரிய மதிப்பீடுகளான சமத்துவம், சமூக நீதி, சமன்மை, சனநாயகம், பன்மைத்துவம், சமயச் சார்பின்மை, தனி நபர் மாண்பு மற்றும் அடிப்படை மனித உரிமைகள் போன்றவற்றை இளம் நெஞ்சங்களில் விதைத்து, அவர்களை சமூக அக்கறையுள்ள குடிமக்களாக எதிர்காலத்தில் உருவாக்குவதே இக்கல்வியின் அடிப்படை.

கொரோனா பெருந்தொற்றுச் சூழலுக்குப் பின்னர், கடந்த ஆண்டு தமிழகத்தில் 200 க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு பயிலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளிடம் இக்கல்வி கொண்டு செல்லப்பட்டது என்பதைப் பெருமையோடு பதிவு செய்கிறோம். வகுப்பறைகளில் மட்டுமல்ல,தமிழகத்தின் 17 மாவட்டங்களில் 150க்கும் மேற்பட்ட கிராமங்களில் 10 குடிமைச் சமூக அமைப்புகளின் உதவியோடு அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக கொண்டு செல்லப்படுகிறது. தமிழகத்தில் மட்டுமல்லாமல், கர்நாடகா மற்றும் ஒடிசா மாநிலங்களிலும் 100 பள்ளிகளிலும் 50 விடுதிகளிலும் 150 கிராமங்களிலும் இக்கல்வி குழந்தைகளிடம் கொண்டு செல்லப்படுகிறது.

குழந்தைகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட ‘‘இந்தியக் குடிமக்களாகிய நாம்’’ – பாடநூல் 1 குழந்தைகளிடம் மிகுந்த வரவேற்பை பெற்றது. அவர்களுக்கு ஏற்ற வகையில் செய்முறைப் பயிற்சிகள், உரையாடல்கள், உண்மைச் சம்பவங்கள், வரலாற்றுக் குறிப்புகள் போன்ற பல்வேறு வடிவங்களில் வண்ணமயமாக உருவாக்கப்பட்ட அந்த பாடநூல், குழந்தைகளை ஈர்க்கும் வகையில் அமைந்ததாக பலரும் பாராட்டினர். இப்பாடநூல் அச்சு வடிவில் மட்டுமல்லாமல், **ISE** அமைப்பின் இயக்குநர் திரு.சியாம் சுந்தர் அவர்களின் உதவியோடு மின்னணு வடிவிலும் நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டு வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளிகளிலும் மாலை நேர மையங்களிலும் முதல் பாடநூலின் மின்னணு வடிவமும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எட்டு பாடங்களை உள்ளடக்கிய இந்திய குடிமக்களாகிய நாம் என்ற தலைப்பில் அமைந்த முதல் பாடநூலைத் தொடர்ந்து அதே வரிசையில் இந்த ஆண்டு இரண்டாவது பாடநூல் வெளிவந்துள்ளது.

இந்த இரு பாடநூல்கள் உருவாக்கத்திலும் சமூக அக்கறை கொண்ட பல்வேறு கல்வியாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆக்கப்பூர்வமாக பங்கெடுத்து அவற்றை செழுமைப்படுத்த உதவினர்.

பல வண்ண அச்சில் வெளிவந்திருக்கும் இந்த இரண்டாவது பாடநூல் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை சிறப்பாக கொண்டு வருவதற்கு தொடர்ச்சியாக உழைத்த அரசமைப்பு உரிமைக் கல்வி பாடத்திட்டக் குழுத் தலைவர் பேராசிரியர் இ.தேவசகாயம், முனைவர் லெ.பெர்னாட், வடிவமைப்பதிலும் செழுமைப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றிய இத்திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் கா.கணேசன் ஆகியோர் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

இக்கல்வித் திட்டத்தை சிறப்பாக கொண்டு செல்ல எங்களுக்கு ஊக்கமளித்து, வழிகாட்டி வரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தின் மேனாள் துணைவேந்தரும், எமது மாநில ஆலோசனைக்குழுவின் தலைவருமான முனைவர் வே. வசந்திதேவி அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி. இப்பாடநூலின் வடிவமைப்பில் கூடுதல் கவனம் செலுத்தி மிகச்சிறப்பாக வடிவமைத்து இதனை அச்சிட்டு வழங்கிய “எழுத்துக் கலையகம்” நிறுவனர் திரு. சி. திருநாவுக்கரசு அவர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்.

இப்பாடநூலைப் படித்து, இதனைச் செழுமைப்படுத்துவதற்கு கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அருள்முனைவர் இ.குழந்தை, மனித உரிமைக் கல்வித் தளத்தில் தொடர்ச்சியாக இயங்கும் திரு. சியாம் சுந்தர், திரு. மரியசூசை, மக்கள் கலைஞர் திரு. ச.அருள், வாசல் பதிப்பக உரிமையாளர் திரு. ரத்ன விஜயன், ஆசிரியர்கள் திரு. மணிமாறன், திரு. அ.அமல்ராஜன், திரு. எஸ்.மூர்த்தி, திரு.பி.ஜெயமூர்த்தி, திருமிகு. ஆர்.சொர்ணலதா, திரு.அன்பழகன், திருமிகு. மேரி ஞான தீபா, அருட்சகோதரிகள் சூர்யா, பவுலின் மற்றும் அரசமைப்பு உரிமைக் கல்வி மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர் க.பிரியா ஆகியோருக்கு எமது நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

அரசமைப்பு உரிமைக் கல்வியை ஒரு பாடமாக நமது பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாடு அரசிடம் தொடர்ந்து முன்வைக்கிறோம். குழந்தைகளுக்கு இக்கல்வியின் அவசியத்தை உணர்ந்து, தமிழக் கல்வித்துறை அனைத்துப் பள்ளிகளிலும் இதனை ஒரு பாடமாகக் கொண்டு செல்ல முன்வர வேண்டும் என்பது எங்களைப் போன்று இத்தளத்தில் பணியாற்றும் பலரது வேண்டுகோள். இது ஒரு வாழ்க்கைக் கல்வி – மதிப்பீட்டுக் கல்வி – குழந்தைகளை மிகச் சிறந்த குடிமக்களாக உருவாக்குவதற்கான அடிப்படைகளை தரும் கல்வி என்று உணர்ந்து, தமிழக அரசு பள்ளிப் பாடத்திட்டத்தில் இதனை இணைக்க வேண்டும் என்பதே எங்கள் அவா.

**ம. பிரிட்டோ**
**திட்ட இயக்குனர்**
**அரசமைப்பு உரிமைக் கல்வி**
**வான்முகில்**

இந்திய அரசமைப்பின் முகப்புரையின் முதலுரையாம் இந்தியக்குடிமக்களாகிய நாம் என்ற தலைப்பில் பாடநூல்! என்று தயாரிக்கப்பட்டு தமிழகப் பள்ளிக்குழந்தைகளுக்கும், தமிழகமெங்கம் செயற்படும் குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்விமன்றக் குழந்தைகளுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டது. இப்பாடநூல் தன்னார்வத்துடன் பயிற்சி பெற்ற ஆசிரியர் வழி, குழந்தைகளுக்கு கற்றுத்தரப்பட்டது. பாடநூலை பெருமகிழ்வோடு ஏற்றுக்கொண்ட ஆசிரியர்களும், பாடநூல் ஏந்திய செய்திகளை வாழ்வின் முதன்முதலில் அறியும் வாய்ப்பு பெற்ற குழந்தைகளும் தந்த வரவேற்பின் மகிழ்வில் இப்பாடநூலை உங்களிடம் தருகின்றோம்.

இந்திய அரசமைப்புச் சட்டமே இந்தியாவின் அடையாளம் (Identity). இந்தியா என்ற பூகோள பரப்பிற்கு எத்தனையோ அடையாளங்கள் இருக்கலாம். இவ்வடையாளங்களைத் தாண்டி, இந்தியாவை உலகுக்கு அடையாளப்படுத்துவது அரசமைப்பு சட்டமே. குடிகளைக் குடிமக்களாகிய சனநாயகத்தின் ஆதார சுருதியே அரசமைப்புச் சட்டம். அரசமைப்புச்சட்டம் இந்நாட்டின் அடிப்படை அடையாளம் மட்டுமல்ல, இந்நாட்டின் பாதுகாப்பு அரணும் ஆகும். இவ்வரசமைப்பு சேதமின்றி காக்கப் பெறுகையில்தான் சனநாயக அரசும் பழுதின்றி பாதுகாக்கப்படும். எப்போதெல்லாம் அரசமைப்புச் சட்டம் சிதைக்கப் பெறுகிறதோ, அப்போதெல்லாம் சனநாயக அரசு யதேச்சதிகார அரசாக மாறிவிடுதலே உண்மை. எனவேதான், இந்தியக்குடிமக்களாகிய நாம், நமக்கான ஓர் அரசமைப்பை ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கியுள்ளோம்.

இந்தியக் குடிமக்களாகிய நாம் உருவாக்க முனைந்துள்ள அரசு எப்படிப்பட்ட அரசாக இருக்கும் என்பதிலும் அரசமைப்பை உருவாக்கிய முன்னோடிகள் மிகத் தெளிவாக இருந்தனர். அதனால் தான் இந்தியாவை ஒரு சனநாயக, சமயச்சார்பற்ற, சமத்துவ, இறையாண்மையோடு கூடிய குடியரசாக அறிவித்தனர்.

சனநாயகம், சமயச்சார்பின்மை, சமத்துவம், இறையாண்மை, குடியாட்சி என்பனவெல்லாம் ஓர் அரசமைப்பின் வடிவங்களோ, கூறுகளோ மட்டுமல்ல, இவை இவற்றுள் உள்ளடங்கிய அரசியலையும் தாண்டி மானுடரால் காப்பாற்றப் பெற வேண்டிய வாழ்வறங்களாகும். இவ்வாழ்வறங்கள் எச்சூழலிலும் சமரசம் செய்யக்கூடா, மதிப்பீடுகளாகும்.

மிக உன்னதமான இவ்வாழ்வறங்கள், நம் பண்பாடாக மாறா நிலையில், இவ்வறங்களை உள்ளடக்கிய அரசமைப்பை நாம் கட்டிக்காக்க முடியாது என்ற நம்பிக்கையில் உதித்ததுதான் இப்பாடநூல் முயற்சி.

மனிதர்க்குரிய மனித உரிமைகளை வெறும் சட்டங்களும் சாசனங்களும் காத்திட முடியாது என்று கருதிய அய்க்கிய நாட்டவை மனித உரிமைகளை ஒரு பண்பாடாக

வளர்த்தெடுக்க வேண்டி மனித உரிமைக்கல்வியை முன்னெடுத்தது. இம்முன்னெடுப்பின் அடிப்படையில், அரசமைப்பு தரும் உரிமைகளை பள்ளிக் குழந்தைகள் மூலம் கொண்டு செல்ல வேண்டும் என்ற விருப்பின் வெளிப்பாடே இம்முயற்சி.

சனநாயகத்திற்கும், சனநாயக நிறுவனங்களுக்கும், அரசமைப்புக்குமான பாதுகாப்பே குடிமக்களுக்கான பாதுகாப்பு என்று கருதியதன் விளையே இக்கல்வி.

அரசமைப்பு உரிமைகளை, பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடமாகக் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஆர்வம் சரியானதாக இருக்கலாம். ஆனால் வாழ்வியல் மதிப்பீடுகளான சனநாயகம், சமத்துவம், சமயச்சார்பின்மை, இறையாண்மை எனும் கோட்பாடுகளுடன் குழந்தைகளுக்கான மொழியில் பாடமாகக் கொண்டு செல்லல் எளிதன்று என்பதனை குழந்தைகளுக்கான பாடமாக வடித்தெடுக்கையில் தான் உணர முடிந்தது. இவ்வுரிமைகளை வகுப்பறை சார்ந்த பாடமாகவோ, தேர்வுக்கான பாடமாகவோ இருக்க முடியாதென்ற உண்மையின் அடிப்படையில், குழந்தைகள் இவ்வுரிமைகளின் சாராம்சத்தை உள்வாங்கும் அளவில் பாடம் தயாரிக்க முயன்றுள்ளோம்.இம்முயற்சியின் வெற்றி முழுவதும் கற்கவிருக்கும் குழந்தைகளிடம் தான் உள்ளதெனினும், கற்பித்தலில் பங்கேற்கும் ஆசிரியப் பெருமக்களின் முழுமையான அர்ப்பணிப்பு இன்றி வெற்றி பெறாது என்பதால் இப்பணியில் ஈடுபடவிருக்கும் ஆசிரியர்கள் தம் முழுமையான ஒத்துழைப்பைத் தர வேண்டுகிறோம்.

சனநாயகம், சமத்துவம், சமயச்சார்பின்மை, இறையாண்மை, குடியாட்சி என்பன வெறும் அரசியல் சித்தாந்தம் மட்டுமல்ல, இவை வாழ்வியல் மதிப்பீடுகள். ஆனால் அரசியல் பண்புகளை உள்ளடக்கியவை. இவைபற்றி நம் குடிமக்கள் நிறைய பேசினாலும், விவாதித்தாலும் இவற்றின் உள்ளடக்கம் மக்களிடம் முழுமையாக வேரூன்றா நிலையில் பாடவடிவில் குழந்தைகளுக்கு கொண்டு செல்ல முயல்கிறோம்.

இம்முயற்சி ஒரு முடிவல்ல. இது ஒரு பரிசோதனை (Experiment) என்பதனை உணர்ந்துள்ளோம். இம்முயற்சியின் வெற்றி உடனடியாகத் தெரியாவிட்டாலும் காலப்போக்கில் இது மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கும் என்று நம்புகிறோம்.

இப்பாடநூல் உருவாக்கத்தில் துணைநின்ற நண்பர்கள் அனைவர்க்கும் நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

**முனைவர் இ. தேவசகாயம்**
தலைவர், பாடநூல் உருவாக்கக் குழு
அரசமைப்பு உரிமைக் கல்வி
வான்முகில்

# பாடநூல் அறிமுகம்

‘‘இந்தியக் குடிமக்களாகிய நாம்’’ – முதல் பாடநூலில் மூன்று இயல்களாக இடம் பெற்ற எட்டுப் பாடங்களின் இறுதியில் அரண்களாக அமைந்திருந்தது, இந்திய அரசமைப்பை பற்றிய ஒரு சிறிய அறிமுகம். இந்திய விடுதலைக்குப் பின்னர் நமக்கான அரசமைப்பு உருவாகிய வரலாறு பற்றியும், மன்னராட்சியில் இருந்து விடுபட்டு, ஒரு மக்களாட்சி இங்கு மலர்ந்தது பற்றியும் சுருக்கமாக பார்த்தோம்.

இதன் தொடர்ச்சியாக உருவாகியுள்ள இந்த இரண்டாவது பாடநூலில் நமது அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் உன்னதமான மதிப்பீடுகளைப் பற்றி விரிவாக பார்க்கப் போகிறோம். எதிர்காலத்தில் இந்தியா எப்படிப்பட்ட நாடாக அமைய வேண்டும் என்று பெருங்கனவு கண்ட அரசமைப்புச் சிற்பிகள், நமது நாட்டை ஒரு சமயச்சார்பற்ற, சனநாயகக் குடியரசாக உருவாக்க முயன்றனர். அதற்கான திசைவழியைத் தீர்மானிக்கும் அடிப்படைகளை நமது அரசமைப்பின் முகப்புரையில் தெள்ளத் தெளிவாக வரையறுத்தனர் .

இந்த அடிப்படைக் கூறுகளை குழந்தைகளாகிய உங்களுக்கு எளிதாக புரியும் வகையில் பல்வேறு எளிமையான எடுத்துக்காட்டுகள், உரையாடல்கள், உண்மைச் சம்பவங்கள், கதைகள் மூலம் இந்த இரண்டாவது பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் முதல் ஐந்து பாடங்கள் முகப்புரை உயர்த்திப் பிடிக்கும் மக்களாட்சி, சமயச்சார்பின்மை, சமத்துவம், இறையாண்மை, குடியரசு ஆகிய ஐந்து அமசங்களை உங்களுக்கு விளக்குகின்றன. ‘‘அனைவருக்கும் நீதி’’ என்ற தலைப்பில் அமைந்த இறுதி அத்தியாயம் குடிமக்களாகிய நமக்கு நீதி பெறும் அடிப்படை உரிமையை விளக்கிச் சொல்கிறது.

இத்தகைய கடினமான கருத்துக்களை குழந்தைகளுக்கு புரியுமாறு சொல்லித் தரமுடியுமா? குழந்தைகள் இவற்றை முழுமையாக உள்வாங்கிக் கொள்வார்களா? என்ற ஐயம் பலருக்கும் எழலாம்.

கனமான செய்திகளை அன்றாடம் நம் வாழ்வில் நடக்கும் பல எடுத்துக்காட்டுகளோடும் உரையாடல்கள் வழியாகவும் எளிய நடையில் கொண்டு செல்லும்போது, குழந்தைகள் நன்கு புரிந்து கொள்ள வாய்ப்புள்ளது. மேலும் பாடத் தலைப்புகளுக்கு பொருத்தமான மேற்கோள்களும், உண்மை நிகழ்வுகளும் குழந்தைகளுக்குள் கூடுதலாக ஆர்வத்தை ஏற்படுத்தும். தவிர ஒவ்வொரு பக்கத்திலும் இடம்பெறும் படங்களும், பல வண்ண வடிவமைப்பும் குழந்தைகளை இன்னும் ஈர்த்து, இக்கருத்துகளை உள்வாங்க வழிவகுக்கும் என்று நம்புகிறோம்.

நமது அரசமைப்பு முகப்புரையின் உன்னதப் பண்புகளை பலரும் பல இடங்களில் பயன்படுத்தினாலும், இவை குடிமக்களாகிய நமது சிந்தனையில் ஊறி, நமது வாழ்நெறியாக மாறும்போதுதான் உண்மையான மக்களாட்சி இங்கு மலரும்! சனநாயகம் தழைக்கும்!. அதை நோக்கிய பயணத்தில் மிக முக்கியமான மைல்கல்லே இந்தப் பாடநூல்.

**பாடநூல் உருவாக்கக் குழு**
அரசமைப்பு உரிமைக்கல்வித் திட்டம்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மக்களாட்சி | 01 |
| 2. | சமயச் சார்பின்மை | 15 |
| 3. | சமத்துவம் | 27 |
| 4. | இறையாண்மை | 45 |
| 5. | குடியரசு | 57 |
| 6. | அனைவருக்கும் நீதி | 73 |
| மாணவர் சாசனம் | | 89 |

“சனநாயகம் என்பது அரசாங்கத்தின் ஒரு வடிவம் அல்ல, மாறாக சமூக அமைப்பின் வடிவம்”
- அண்ணல் அம்பேத்கர்



# 1 மக்களாட்சி
## மக்களாட்சியை வாழ்நெறியாக்குவோம்!

**நோக்கங்கள்**

- மக்களாட்சி பற்றியும் அதன் அடிப்படைப் பண்புகளையும் தெரிந்து கொள்ளுதல்.
- மக்களாட்சி நிறுவனங்களின் பணிகளை அறிந்து கொள்ளுதல்.
- வகுப்பறையில் கற்றுக் கொண்ட மக்களாட்சி மதிப்பீடுகளைப் பண்பாடாக வளர்த்தெடுத்தல்.



## ஆசிரியர்களுக்கான கற்றல் - கற்பித்தல் குறிப்புகள்

1. மக்களாட்சி பற்றிய அறிவை வளர்ப்பதோடு, அதன் உயர் பண்புகளை குழந்தைகளிடம் உருவாக்குவதே இப்பாடத்தின் நோக்கம்.
2. இப்பாடத்தை குழந்தைகள் முழுமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் “**உரையாடல், விவாதங்கள்**” வழியாகக் கொண்டு செல்லலாம்.
3. குழந்தைகள் அனைவரும் உரையாடலில் **முழுமையாக பங்கேற்பதை** உறுதி செய்யவும். உரையாடலைப் பட்டிமன்றமாகவோ, நாடகமாகவோ நிகழ்த்திக் காட்டலாம்.
4. பாடத்திற்குப் பொருத்தமான தகவல்களைத் தங்கள் வீடுகளில், நண்பர்களிடத்தில், தொலைக்காட்சிகளில், செய்தித்தாள்களில், இணையத்தில் தேடி அவற்றை வகுப்பில் பகிரச் சொல்லலாம்.
5. பயிற்சிப் பகுதிகளை குழந்தைகள் முழுமையான ஈடுபாட்டுடன் செய்திட ஊக்கப்படுத்தவும். அவற்றை உரிய முறையில் காட்சிப்படுத்தி குழந்தைகளைப் பாராட்டி அங்கீகரிக்கவும்.



## அறிமுகம்

குழந்தைகளே!

மக்களாட்சி பற்றிய பாடம் எங்களுக்கு ஏன் என்ற கேள்வி உங்கள் மனதில் எழுகிறதா? அவ்வாறு மனதில் எழும் கேள்விகளுக்கு விடை தேடும் பாடம்தான் இது. இப்பாடத்தின் மூலம் மக்களாட்சி பற்றியும் அதன் அடிப்படைப் பண்புகளையும் தெரிந்து கொள்வீர்கள்.

இப்போது பாடத்திற்குள் செல்வோமா, வாருங்கள்!

மக்களாட்சியைப் புரிந்து கொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள உரையாடலைக் கவனமாக வாசித்து குழந்தைகள் குழுக்களாகப் பிரிந்து வகுப்பில் நடித்துக்காட்டலாமே!



## உரையாடல்-1

கந்தன் : உங்க வீட்டில் எத்தனை பேர் இருக்காங்க?

இரவி : எங்க வீட்டில் ஆறு பேர் இருக்கோம்.

கந்தன் : உங்கள் குடும்பத்தில் தலைவர் யார்? அப்பாவா? அம்மாவா? தாத்தாவா? பாட்டியா?

கயல்விழி : பாட்டிதான் எங்க வீட்டின் குடும்பத் தலைவர்.

வெரோனிக்கா : **உங்க வீட்டில் முக்கியமான முடிவுகளை யார் எடுப்பாங்க?**

இரவி : எங்க வீட்டில் அப்பாதான் எல்லா முடிவுகளையும் எடுப்பாங்க.

சித்தார்த் : எங்க வீட்டில் அம்மா அல்லது அப்பா யாராவது ஒருவர் முடிவு எடுப்பாங்க. ஆனால், முடிவு எடுப்பதற்குமுன் நிறைய விவாதம் செய்வாங்க.

யாழினி : எங்க வீட்டில் எல்லா முடிவுகளையும் தாத்தாவும் பாட்டியும்தான் எடுப்பாங்க.

அப்துல் : எங்க வீட்டில் அம்மாவும், அப்பாவும் சேர்ந்துதான் முடிவுகளை எடுப்பாங்க.

எழில் : எங்க வீட்டிலும் அம்மா, அப்பாதான் முடிவு எடுப்பாங்க. ஆனால், முடிவு எடுப்பதற்கு முன்பு தாத்தா, பாட்டி கருத்தையும் என் கருத்தையும் கேட்பாங்க.

கந்தன் : உண்மையாகவா?

எழில் : ஆமாம், நானும் சொன்னதைக் கேட்டு எங்க வீட்டிலும் சில முடிவுகளைக்கூட மாத்தியிருக்காங்க.

உங்கள் வீடுகளில் முடிவுகள் எதன் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன?



இம்முடிவு எடுக்கும் முறையில் "**சனநாயகப் பண்புகள்**" இருக்க வேண்டும்.




**உரையாடல்-2 : சிறு நாடகமாக வகுப்பறையில் நிகழ்த்தலாமே!**

அந்தோணி : உங்கள் கிராமத் தலைவரின் பெயர் தெரியுமா?

செந்தமிழ் : ஆம், எங்கள் கிராமத் தலைவரின் பெயர் தெரியும்.

பார்வதி : கிராமத் தலைமைப் பொறுப்பு நிரந்தரமானதா?

பாத்திமா : ஒரு காலத்தில் ஒரு சிலரே நிரந்தரமான தலைவர்களாக இருந்ததாக எங்க தாத்தா சொல்லியிருக்கார். ஆனால் இப்போது அம்மாதிரி இல்லை. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் மூலம் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.



அந்தோணி : சரியா சொன்ன பாத்திமா, உங்கள் ஊரில் நடைபெறும் தேர்தலில் அனைவரும் பங்கேற்கிறார்களா?

பார்வதி : ஆம், ஊரில் உள்ள மக்கள் அனைவரும் தேர்தலில் பங்கேற்கிறார்கள்.

வள்ளிமயில் : சில இடங்களில் சாதி, மொழி, சமயம் பார்த்து ஓட்டு போடுறாங்க. அப்படி ஓட்டுப் போடுவது உண்மையான தேர்தல் இல்லைன்னுதான் நான் நினைக்கிறேன்.

பார்வதி : தேர்தலில் ஒரு நபருக்கு எத்தனை ஓட்டுகள் உள்ளன?

அன்பு : நாட்டில் உயர்ந்தவர், பணக்காரர், பெரிய மனிதர் என்பதால் கூடுதல் ஓட்டுகள் யாருக்கும் அளிக்கப்பட வில்லை.

**"ஒருவருக்கு ஒரு ஓட்டு. ஒரு ஓட்டு ஒரு மதிப்பு"** என்ற அடிப்படையில்தான் குடிமக்கள் அனைவருக்கும் சமமாக வாக்குரிமையை நமது அரசமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ளது.

குழந்தைகளே!

வீட்டில், கிராமத்தில் மக்களாட்சியின் பண்புகளைத் தேடிய நாம் அடுத்து நாட்டில் மக்களாட்சியின் அடிப்படையைத் தெரிந்து கொள்வோமா! மக்களாட்சிக்கு முன்னரும் ஒரு ஆட்சி முறை இருந்திருக்கும் அல்லவா? அதைத்தான் நாம் முடியாட்சி அல்லது மன்னராட்சி என்கிறோம்.




பங்கேற்பும் உரையாடலும் மறுக்கப்பட்ட சமூகத்தின் நிலை என்னவாக இருந்திருக்கும்?




**"மக்களாட்சி" என்பதன் வரையறை**

மக்களாட்சி பற்றிய வரையறைகள் பல்வேறு காலக் கட்டங்களில் வெவ்வேறு விதமாக பொருள் கொள்ளப்பட்டு வருகின்றன. கிரேக்கய மொழியில் **"டெமோஸ்"** என்றால் மக்கள் என்றும் **"க்ரடோஸ்"** என்றால் அரசு என்று பொருள்படும். எனவேதான் **"டெமாக்ரசி"** என்ற சொல்லுக்கு **"மக்களால் ஆளப்படும் அரசு"** என்று பொருள் கொள்கிறோம்.

### இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மக்களாட்சி

சாதி, சமயம், மொழி, இனம்,பண்பாடு, பழக்கவழக்கங்கள் என எண்ணற்ற வேறுபாடுகளைக் கொண்டதுதான் நம் நாடு. மன்னராட்சி, ஆங்கிலேயர் ஆட்சி என பல்வேறு ஆட்சி முறைகள் இருந்த நாட்டில் நாடு சுதந்திரம் பெற்றதும் அனைத்து மக்களுக்கான அரசு அமையவேண்டும் என தலைவர்கள் விரும்பினர். அந்த அரசில் பலதரப்பட்ட மக்களும் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்றும் விரும்பினர். அப்படிப்பட்ட அமைப்பு முறையே மக்களாட்சி அரசாக அமையும் என்று நம்பினர். அனைத்து மக்களும் அரசில் பங்கேற்க ஏதுவான அரசை ஏற்படுத்த தலைவர்கள் உறுதி எடுத்தனர். எனவே அனைத்து மக்களையும் உள்ளடக்கிய "மக்களாட்சி" முறையைத் தெரிவு செய்தனர்.

## மக்களாட்சியின் உள்ளடக்கம்




## மக்களாட்சியின் (சனநாயகத்தின்) முக்கிய தூண்கள்

*சிறு நிகழ்வின் மூலம் மக்களாட்சியின் முக்கிய தூண்களைப் பற்றிப் புரிந்து கொள்ளலாமா?*




*நான்கு குழந்தைகள் நான்கு தலைப்புகளைத் தாங்கிய (சட்டம், நிர்வாகம், நீதித்துறை, ஊடகம்) பதாகைகளைக் கையில் ஏந்தி வகுப்பில் நான்கு திசைகளிலும் நிற்க வேண்டும். ஆசிரியரின் உதவியுடன் தனியாகவோ அல்லது குழுவாகவோ ஒவ்வொரு தூணின் அமைப்பு மற்றும் அதன் செயல்பாடுகளைப் பகிரலாம்.*

## மக்களாட்சியின் (சனநாயகத்தின்) முக்கிய தூண்கள்

**1. சட்டம் இயற்றும் துறை**
- நாடாளுமன்றம்
- சட்டமன்றம்

**2. நிர்வாகம்**
- குடியரசுத் தலைவர் முதல் கிராம நிர்வாக அலுவலர் வரை

**3. நீதித்துறை**
- உச்சநீதிமன்றம்
- உயர்நீதிமன்றம்
- கீழமை நீதிமன்றங்கள்

**4. ஊடகம்**
- அச்சு ஊடகங்கள்
- மின்னணு காட்சி ஊடகங்கள்
- வானொலிகள்
- சமூக ஊடகங்கள்

### உங்களுக்குத் தெரியுமா?

**உலக மக்களாட்சி தினம்**
**செப்டம்பர்-15**

பாகுபாடின்றி அனைவருக்கும் அனைத்து உரிமைகளும், வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும். சனநாயக ரீதியில் அரசைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு. சனநாயகத்தைக் காக்கவும், சனநாயக அமைப்புகளை வலுப்படுத்தவும் அரசுகளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஐக்கிய நாடுகள் பொது அவை 2007-ஆம் ஆண்டு நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ஆம் நாள் உலக மக்களாட்சி நாள் என்று கொண்டாடப்படுகிறது.

**மக்களாட்சியைப் புரிந்து கொள்ள கீழ்க்கண்ட நிகழ்வுகளை வாசித்து வகுப்பில் உரையாடுங்கள்**

**நிகழ்வு 1 : ஊராட்சி மன்றத் தலைவர் அவரது இருக்கையில் அமரவே உரிமையில்லை**



இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் அமைந்திருக்கும் கடைக்கோடி ஊராட்சி உத்திரம்பட்டு. கடந்த உள்ளாட்சித் தேர்தலின்போது பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டது. ஊராட்சி மன்றத் தலைவராக மனோகரன் என்பவர் தேர்வு செய்யப்பட்டார். ஊராட்சி மன்றத் தலைவர் இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதாலேயே நிர்வாகத்தில் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்திவரும் நபர்கள் அவரைத் தலைவர் இருக்கையில் அமரவிடவில்லை.

“பெயருக்குத்தான் தலைவர் பொறுப்பில் இருக்கிறேன். என்னை அலுவலகத்துக்குள்ளேயே விடுவதில்லை” என்று வருத்தத்துடன் பகிர்ந்து கொண்டார். மாவட்ட ஆட்சியர் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். **- ஜுனியர் விகடன்**

1. தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவரை இருக்கையில் அமரவிடாமல் தடுத்தது நியாயமா?
2. சகமனிதனைச் சமமாக ஏற்க மறுப்பதன் காரணம் என்ன?
3. இவ்வாறு நம்மை இழிவுப்படுத்தினால் நம் உணர்வுகள் எப்படி இருக்கும்?
4. எல்லோரும் சமம் என்ற எண்ணத்தை வளர்க்க நாம் என்ன செய்யலாம்?

**நம் சிந்தனைக்கு**



**சனநாயகம் ஒரு வாழ்க்கை முறை**

"மக்களாட்சி முறை நடைபெறுகின்ற நம்நாட்டில் மக்களாட்சி என்பது ஒரு அரசியல் கோட்பாடு மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை முறை. நண்பர்களுக்கிடையில், கணவன் மனைவிக்கிடையில், குடும்பச் சூழ்நிலையில், கடை வீதியில், ஊரில், நாட்டில், சட்டசபையில், நாடாளுமன்றத்தில், எங்கும் மக்களாட்சி செழித்து வளர வேண்டும். மக்களாட்சி வடிவம் மட்டும் போதாது; மக்களாட்சி உணர்வும் அவசியம்"

-குன்றக்குடி அடிகளார்

### நிகழ்வு 2 : ஊராட்சித் தலைவர் பதவி ஏலம்

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒரு கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவி ரூ.13 இலட்சத்துக்கு ஏலம் விடப்பட்டு, தலைவர் தேர்வு செய்யப்பட்டதாக வெளியான தகவலையடுத்து, மாவட்ட ஆட்சியர் விசாரணை மேற்கொண்டார். "அரசமைப்புச் சட்டத்திற்கு முரணான இந்நிகழ்வுகள் கண்டிக்கத்தக்கவை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவிகள் ஏலம் விடப்படுவது மக்களின் உணர்வுகளுக்கும் சனநாயகத்திற்கும் தீங்கு விளைவிப்பதாகும். இதுபோன்ற தவறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார் மாவட்ட ஆட்சியர்.

- இந்து தமிழ் திசை நாளிதழ்

1. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட வேண்டிய பதவிகளை ஏலம் விடலாமா?
2. பதவி ஏலம் விடுவதால் மக்களின் தேர்ந்தெடுக்கும் உரிமை மறுக்கப்படுகிறதா?
3. பணம் கொடுத்து ஓட்டு வாங்குவது சரியான செயலா?



4. மக்களாட்சியை வளர்க்க எதிர்கால வாக்காளர்களாகிய நீங்கள் என்ன செய்வீர்கள்?

## மக்களாட்சியில் பெண்களின் பங்கேற்பு

2011ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கள் தொகை 121.1 கோடியாகும். அதில் 48.5 விழுக்காடு பெண்கள் உள்ளனர். மக்களின் நலனுக்கான வளர்ச்சித் திட்டங்களையும் சட்டங்களையும் வகுக்கும் நாடாளுமன்றத்தில் மக்கள் தொகையில் சரிபாதியாகவுள்ள பெண்களின் விழுக்காடு என்பது மக்களவையின் 542 உறுப்பினர்களில் 82 (15.1) ஆகவும், மாநிலங்களவையில் 239 உறுப்பினர்களில் 33 (13.8) ஆகவும் உள்ளது. உலகின் பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரவரிசையில் 140வது இடத்தில் இந்தியா உள்ளது. மேலும் மத்திய அமைச்சரவையில் பெண் அமைச்சர்கள் இரு அமைச்சர்களே என்ற நிலையில் (6.7) உலகளவில் 171வது இடத்தில் உள்ளது.

1. மேற்கண்ட புள்ளி விபரங்களைப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?
2. மக்கள் தொகையில் சரிபாதியாக உள்ள பெண்களில் ஏன் அதிகளவில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப் பெறவில்லை?
3. பெண்களின் அரசியல் பங்கேற்புக்குத் தடையாக இருப்பவை எவை?
4. அரசியலில் பாலின சமத்துவத்தை வளர்க்க என்ன செய்யலாம்?
5. பெண் தலைமை ஏற்பதில் ஆண்கள் தடையாக உள்ளனரா?



## பயிற்சிகள்

### 1. வார்த்தைத் தேடல்

மக்களாட்சி, சமத்துவம், மாண்பு, சமூக நீதி, மனித உரிமை, சுதந்திரம், வெளிப்படைத்தன்மை, பங்கேற்பு, உரையாடல்

### 2. புதிர் கட்டகத்திலிருந்து கீழ்க்கண்ட வார்த்தைகளைக் கண்டுப்பிடியுங்கள்

(அரசமைப்பு, சமத்துவம், சமூகநீதி, சுதந்திரம், மாண்பு, பன்மை, சகோதரத்துவம், சமயசார்பின்மை, மக்களாட்சி, குடியரசு, ஒற்றுமை, சகிப்பு, வேறுபாடு, பாகுபாடு, வறுமை)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ய | ள | உ | ச | ந | டி | உ | ம |
| ச | ம | த் | து | வ | ம் | எ | க் |
| கோ | ட | ட | வ | ல | ர | க | க |
| த | ஒ | ற் | று | மை | தி | ர | ளா |
| ர | அ | டி | மை | வ | ந் | த | ட் |
| த் | ச | ந | வ | ற | த | ழ | சி |
| து | கு | டி | ய | ர | சு | ங | ற |
| வ | வே | று | பா | டு | ம | எ | ப |
| ம் | ச | தை | ப | பா | கு | பா | டு |
| பு | ப் | கி | ச | மூ | க | நீ | தி |
| ம | க | ஒ | உ | பு | ர | டி | எ |
| இ | றை | யா | ண் | மை | ன் | ப | உ |
| ங | ற | மா | ன | எ | ஒ | ண | ரி |
| ச | ம | ய | சா | ர் | பி | ன் | மை |

### 3. மக்களாட்சியில் நமக்கு என்னென்ன உரிமைகள் உள்ளன?

1. வாக்களிப்பதற்கான உரிமை
2. பேசுவதற்கான உரிமை
3. கல்விக்கான உரிமை
4. இருப்பிடத்திற்கான உரிமை
5. ....................................
6. ....................................
7. ....................................



அடிப்படை உரிமைகள்

4. மக்களாட்சியை வளர்ப்பனவையும் சிதைப்பனவையும் வரிசைப்படுத்துங்கள்

அடிப்படைவாதம், சமத்துவம், பதில் சொல்லும் பொறுப்பு, பிரிவினைகள், சுதந்திரம், சம வாய்ப்பு, பங்கேற்பு, மத, இனவாதம், உரையாடல், விவாதம், வெளிப்படைத் தன்மை, தேர்தல், வாக்குரிமை, கல்வியறிவின்மை, மக்களுக்கான அரசு, சாதியப் பாகுபாடு, வேலைவாய்ப்பின்மை, வன்முறைகள், சுரண்டல், கையூட்டு, மொழிப் பாகுபாடு, பாலினப் பாகுபாடு, ஏற்றத்தாழ்வுகள், ஏழ்மை, சர்வாதிகாரம்

| மக்களாட்சியை வளர்ப்பன | மக்களாட்சியைச் சிதைப்பன |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |
| 6. | 6. |

5. நண்பருக்கு கடிதம் எழுதுங்கள்

குழந்தைகளே!



உங்கள் வகுப்பறையுள் பல குணத்தவர் உள்ளனர். வசதி வாய்ப்புகளில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. பல்வேறு சாதிப் பிரிவினரும் உள்ளனர். ஆண், பெண் பாலினத்தால் வேறுபட்டுள்ளோம். பன்மைத் தன்மையுடைய இவ் வகுப்பறையை சனநாயக வகுப்பறையாக மாற்ற என்ன செய்யலாம்? இது பற்றி உங்கள் நண்பருக்கு கடிதம் எழுதுங்கள்.

6. வகுப்பறை விவாதம்

குழந்தைகளே! கீழ்க்கண்ட கேள்விகளின் அடிப்படையில் வகுப்பறையில் விவாதியுங்கள்.

1. உங்கள் குடும்பங்களில், ஊரில் பழகும்போது சனநாயகப் பண்புகள் வெளிப்படுகின்றனவா?
2. உங்கள் பள்ளி நடவடிக்கைகளில் சனநாயகப் பண்புகள் வெளிப்படுகின்றனவா?

3. கிராமங்களில் நடைபெறும் பஞ்சாயத்துக் கூட்டங்கள் எப்படி நடக்கின்றன?
4. கிராமக் கூட்டங்களில் அதிகாரம் படைத்தோர் மட்டும் பேசுகின்றனரா? கடைக் கோடியில் இருப்பவரும் பேச அனுமதிக்கப்படுகின்றனரா? கிராமங்களில் நடைபெறும் கூட்டங்களில் சமத்துவம் நிலவுகிறதா?
5. மக்கள் பிரதிநிதிகளை நாமே தெரிவு செய்யும் உரிமைகளை அறிந்துள்ளீர்களா?
6. மக்களாட்சியின் ஒரு பகுதியான தேர்தலின் மகத்துவம் பற்றி அறிவீர்களா?

**7. பட்டிமன்றம்**

எது சிறந்த ஆட்சி முறை? மக்களாட்சியா? அல்லது மன்னராட்சியா? உங்கள் வகுப்பறையில் ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் பட்டிமன்ற முறையில் விவாதம் நிகழ்த்துங்கள்.




**8. வகுப்பறைப் பகிர்வு**

மாணவர்கள் அனைவரையும் தங்கள் கருத்துளைப் பகிரச் சொல்லலாம்.

1. ஊடகங்களில் நடைபெறும் விவாதங்களை கவனித்துள்ளீர்களா?
2. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் நடைபெறும் விவாதங்களைத் தொலைக்காட்சிகளில் பார்த்துள்ளீர்களா?
3. உங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்று தெரியுமா?



“வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே நாகரீக சமூகத்தின் அடையாளம்”

– மகாத்மா காந்தி



# 2 சமயச் சார்பின்மை

## சமயங்களைச் சமமாகப் போற்றுவோம்!

**நோக்கங்கள்**

- சமயச் சார்பின்மை என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளல்.
- அரசமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள சமயச் சுதந்திரம் குறித்த சட்டப் பிரிவுகளின் பொருளை உணர்ந்து கொள்ளல்.
- பல சமயங்களைச் சேர்ந்த மக்களிடையே நல்லிணக்கத்தையும் சகிப்புத் தன்மையையும் வளர்ப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளல்.



## ஆசிரியர்களுக்கான கற்றல் – கற்பித்தல் குறிப்புகள்

1. பல்வேறு சமயங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கான தேவையை உணர்த்துதல்.

2. **"உரையாடல், விவாதங்கள்"** மூலம் குழந்தைகளின் **பங்கேற்பை** உறுதி செய்யும் வகையில் பாடங்களை நடத்தத் திட்டமிடுதல் அவசியம்.

3. இப்பாடம் சமய நம்பிக்கை தொடர்பானதாக இருப்பதால் பாடம் நடத்தும் ஆசிரியர் **எவர் மனதையும் புண்படுத்தாமல் பார்த்துக் கொள்வது** மிக இன்றியமையா தேவையாகும்.

4. சமயங்களைக் கடந்து மனித உறவுகளை வளர்த்துக் கொள்ள உங்கள் அனுபவத்தின் வழியாக வகுப்பறைச் செயல்பாடுகளைக் கொண்டு செல்லவும்.



**குழந்தைகளே!**

வகுப்பறையுள் நாம் அனைவரும் கற்க வந்தவர்களே.

நாம் அனைவரும் மாணவர் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகிறோம். ஆனால் கொஞ்சம் உற்றுப் பாருங்கள்!




இவ்வாறு நாம் அனைவருமே வேறுபடுகிறோம்.
இவை மட்டுமல்ல கீழ்க்கண்ட காரணிகளாலும் வேறுபடுகிறோம்.




நம்மிடையே பல சமய நம்பிக்கைகள், சமய ரீதியிலான வேற்றுமைகள் பல இருந்தாலும் அனைத்துச் சமயங்களையும் சமமாக மதிக்க வேண்டும் என்று நமது அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. **இவ்வுயரிய சமயச் சார்பின்மை என்ற மதிப்பீடுதான் நம் அரசின் அடிப்படை கொள்கைகளில் ஒன்றாக அமைந்துள்ளது.** இந்த சமயச்சார்பின்மை பற்றித்தான் இப்பாடத்தில் தெரிந்துக் கொள்ளப் போகிறோம். வாருங்கள், பாடத்திற்குள் செல்வோமா!

**வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்!**

நான் யார்? என்னுடைய அடையாளம் எது? வகுப்பில் நான் யாராக இருக்கிறேன்? நாம் ஏன் குழுவாக இணைய வேண்டும்?

வாருங்கள் வேற்றுமையில் ஒற்றுமையைப் புரிந்துக் கொள்ள முயற்சி செய்வோம்.




நாம் என்று ஒரு வட்ட வடிவ அட்டையில் எழுதி வகுப்பின் மையத்தில் (தரையில்) ஒட்டவும். பிறகு நூலால் படத்தில் உள்ளவாறு பல்வேறு கிளைகளாகப் பிரிக்கவும். ஒவ்வொரு கிளையிலும் சிறிய வட்ட வடிவ அட்டையில் "என்னுடைய அடையாளம் எது?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கும் விதமாக சமயம், மொழி, பிறந்த ஊர், பிடித்த உணவு, அணியும் ஆடை என எழுத வேண்டும். பிறகு தலைப்பிற்கு ஏற்ப குழந்தைகள் அனைவரும் தங்கள் கருத்துகளைச் சிறிய தாளில் எழுதி அதற்குரிய கிளையில் ஒட்டவேண்டும்.

அனைவரும் எழுதி ஒட்டிய பிறகு இது குறித்து சேர்ந்து உரையாடலாம்.

1. நாம் அனைவரும் ஒரே மாதிரியாக உள்ளோமா?
2. நாம் அனைவரும் ஒரே மாதிரியான அடையாளங்களைக் கொண்டுள்ளோமா? அல்லது வேறுபட்ட அடையாளங்களைக் கொண்டுள்ளோமா?

3. நம்மிடையே காணப்பெறும் வேறுபாடுகளை வைத்து நம்மைப் பாகுபடுத்தலாமா?

4. வேற்றுமையில் ஒற்றுமை என்பதன் பொருள் என்ன?

மேற்கண்ட கேள்விகளுக்கு உங்கள் வகுப்பறையில் பதிலைத் தேடவும்.

**சமயச் சார்பின்மை என்றால் என்ன?**

01 அரசு என்பது அனைவருக்கும் பொதுவானது. அரசின் கொள்கை, நிர்வாகம் மற்றும் அதன் செயல்பாடுகள் எந்த சமயத்தையும் சார்ந்து இருக்காது.

02 சமயம் என்பது தனிநபர்களின் நம்பிக்கை மற்றும் உரிமை சார்ந்தது.

03 குடிமக்களின் சமய நம்பிக்கையில் அரசு தலையிடாது.

04 தனிமனிதர்கள் எந்தச் சமயத்தைச் சார்ந்து இருந்தாலும், அவர்கள் சமமான குடிமக்களாவர்.

05 ஒவ்வொருவருக்கும் தான் விரும்பிய சமயத்தைத் தெரிவு செய்யவும் தேவையெனில் அதனை மாற்றிக் கொள்ளவும் உரிமை உண்டு.

**சமயச் சார்பின்மையைப் புரிந்து கொள்ள கீழ்க்கண்ட உரையாடலை சிறுநாடகமாக வகுப்பில் நிகழ்த்துங்கள். ஆசிரியர் உங்களுக்கு உதவுவார்.**

**எழில்** : சமயச்சார்பின்மை என்றால் சமயங்களை மறுப்பதா?

**ஆசிரியர்** : அப்படி அல்ல. சமயங்களை மறுப்பது அல்ல; மாறாக அனைத்துச் சமயங்களையும் சமமாக மதிப்பதே சமயச் சார்பின்மை ஆகும்.

**இளம்பிறை** : இந்தியாவைப் போன்ற சமயச் சார்பற்ற நாடுகள் உலகில் உள்ளனவா?

**ஆசிரியர்** : பிரான்சு, கொரியா, அமெரிக்கா, சீனா, ஸ்வீடன் இன்னும் பல நாடுகள் சமயச் சார்பற்ற நாடுகளாக உள்ளன.

**கலைநிலவு :** சமயச்சார்பின்மையின் தேவை ஏன் உருவானது?

**ஆசிரியர் :** பல மேலை நாடுகளில் அரசுக்கும் சமயத்திற்கும் தொடர்ந்து மோதல் நிலவியதால் அங்கு சமயச் சார்பற்ற கொள்கை தேவைப்பட்டது.

**இந்தியா பல்வேறு சமயங்களையும் சமய நம்பிக்கைகளையும் கொண்டது. குடிமக்களின் சமய நம்பிக்கைகளைச் சமமாக மதிக்க வேண்டும் என்று நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைவர்கள் நம்பினர். இந்த நம்பிக்கையைப் போற்றும் வகையில்தான் இந்தியாவின் சமயச்சார்பற்ற கொள்கை உருவாக்கப்பட்டது.**

**கணியன் :** சமயச்சார்பற்ற நாட்டில் சமய நடவடிக்கைகளில் அரசு தலையிடலாமா?

**ஆசிரியர் :** சமய நடவடிக்கைகள் சமூக அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் சூழல்களில் மட்டும் அரசு தலையிடும்.

சமயச் சார்பின்மை என்றால் என்ன என்ற புரிதல் ஓரளவு ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறோம்.

இந்தியச் சமூகம் வகுத்துள்ள சமயச் சார்பின்மை, இந்தியாவின் நிலைத்த தன்மைக்குக் கொடுக்கப்பட்டுள்ள நன் மருந்து. இந்தியாவில் இந்து, இசுலாம், கிறித்தவம், சீக்கியம், சமணம், பௌத்தம் இன்னும் பல சமயங்களைச் சார்ந்தோர் ஓரளவு பிணக்கின்றி வாழ்வதற்கு இந்தியாவின் சமயச்சார்பின்மை எனும் கொள்கையே முக்கியக் காரணம்.

நம் சிந்தனைக்கு



**சமயச் சார்பின்மை என்பது இந்தியாவின் இதயம்**

“சமயச் சார்பின்மை என்பது ஒரு வார்த்தை மட்டும் அல்ல. இது ஒரு **கருத்தியல்.** இந்திய அரசமைப்பை உருவாக்கிய நம் தலைவர்களால் கண்டறியப்பட்ட சொல்லாக்கம். பன்முகத் தன்மையுடைய இந்தியச் சமூகத்தை எப்படி நடத்துவது என்று கற்றுத் தருகின்ற ஒரு உன்னதமான **மதிப்பீடு**”.

## சமயச் சார்பின்மையின் அடிப்படைப் பண்புகளை நினைவில் கொள்க

இந்தியாவில் எந்தச் சமயமும் அரசின் அதிகாரப்பூர்வ சமயமாக இருக்காது.

ஒரு நபர் தான் விரும்பிய சமயத்தைத் தழுவவும், பரப்பவும், பின்பற்றவும் உரிமை உண்டு

சனநாயகத்தையும் அடிப்படைச் சுதந்திரத்தையும் சமயச் சார்பின்மை

சமயங்களுக் கிடையே நல்லிணக்கத்தை வளர்த்தெடுக்க சமயச் சார்பின்மை உதவும்.

### சமயச் சுதந்திரம் பற்றி அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது?

**பிரிவு 25**

மக்கள் அனைவரும் எந்தச் சமயத்தையும் தழுவவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை உண்டு.

**பிரிவு 26**

அனைத்துச் சமயங்களின் அறநிலைய அமைப்புகள் சொத்துக்களை வாங்கவும், அவற்றைப் பராமரிக்கவும், நிர்வகித்துக் கொள்ளவும் உரிமை உண்டு.

**பிரிவு 27**

எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தின் வளர்ச்சிக்காகவும், பராமரிப்பிற்காகவும், செலவினங்களுக்காகவும் வரி செலுத்துமாறு எந்த ஒரு நபரையும் கட்டாயப்படுத்த முடியாது.

### நம் சிந்தனைக்கு




சிந்திக்க, மனசாட்சிப்படி நடக்க, ஒரு சமயத்தைத் தெரிவு செய்ய, விரும்பினால் தனது சமயத்தை மாற்றிக் கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. சமய நம்பிக்கைகளைத் தனியாக அல்லது குழுவாக ஏற்றுக்கொள்ளவும், வெளிப்படையாகப் போதிக்கவும், கடைப்பிடிக்கவும், வழிபடவும் அனைவருக்கும் உரிமையுண்டு.

*- பிரிவு 18, அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948*

## சமய நல்லிணக்கம்

நம் அன்றாட வாழ்வில் சமயச் சார்பின்மை ஒன்றாகக் கலந்துள்ளது என்பதை கீழ்க்கண்ட நிகழ்வு மூலம் புரிந்துக் கொள்வோமா?

### சமய பேதமின்றி மக்கள் அனைவரும் இணைந்து எழுப்பிய பள்ளிவாசல்

சமய நல்லிணக்கத்திற்கு எடுத்தக்காட்டாக விளங்கும் பனங்குடி, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள சிறு கிராமமாகும். இக்கிராமத்தில் உள்ள முகைதீன் ஆண்டவர் ஜும்மா பள்ளிவாசல் சிதிலமடைந்ததால் புதிய பள்ளிவாசலைக் கட்ட முடிவு செய்தனர். கட்டுமானத்திற்கான அனைத்துச் செலவினங்களையும் இந்து, கிறித்தவர், இசுலாமியர் என அனைவரும் பகிர்ந்து கொள்ளவே, வேகமாகப் பள்ளிவாசல் கட்டி முடிக்கப்பட்டது. பள்ளி வாசல் திறப்பு விழாவில் ஊரில் உள்ள அனைத்து சமய மக்களும் சகோதர உணர்வுடன் கலந்து கொண்டனர்.



"நூற்றாண்டுகளுக்கும் மேலாக தலைமுறை, தலைமுறையாக மூன்று சமயத்தினரும் சமய நல்லிணக்கத்தோடு, ஒற்றுமையாக வாழ்கிறோம்" என்றார் ஒருவர். "எங்க கோயில்ல கும்பாபிஷேகம், திருவிழா வந்தால் இசுலாமியர்கள், கிறித்தவர்கள் சீர் எடுத்துக்கிட்டு வருவாங்க. அதே மாதிரி அவங்க எந்த நிகழ்ச்சி நடத்தினாலும், நாங்க சீர் எடுத்துக்கிட்டுப் போவோம். சாதி, சமய வேறுபாடு எதையுமே நாங்க பார்க்கிறதில்ல. சமய நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக எங்க கிராமம் இருப்பது ரொம்பவே மகிழ்ச்சியா இருக்கு" என்றார் மற்றொரு ஊர் பெரியவர்.

-விகடன்

**உங்கள் சிந்தனைக்கு**

1. சமய நல்லிணக்கத்தைப் போற்றும் இது போன்ற நிகழ்வுகள் உங்கள் பகுதியில் நடக்கின்றனவா?
2. சமய நல்லிணக்கத்தை வளர்க்க நீங்கள் என்னவெல்லாம் செய்வீர்கள்?

**உங்களுக்குத் தெரியுமா?**

**உலக சமய நல்லிணக்க வாரம்**

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 1 முதல் 7 தேதி வரை ஒரு வார காலத்தை உலக சமய நல்லிணக்க வாரமாக ஐக்கிய நாடுகள் அவை பிரகடனப்படுத்தி உள்ளது. இந்த வார காலத்தில் பலதரப்பட்ட சமய நம்பிக்கையுடையோரிடம் நல்லிணக்கத்தை மேம்படுத்தி, ஒருவர்க்கொருவர் புரிதலை உருவாக்கி சமயங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை வளர்த்தெடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.



எந்த சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் பிற சமயத்தினரையும் நேசிக்க வேண்டும்.

எந்தச் சமயமும் பிற சமயத்திற்கு எதிரானது அல்ல.

அரசு எந்த சமயத்தையும் சாராமல் தனிமனிதர்களின் சமயச் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

மதம் ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கை;
அரசியலில் சமயத்திற்கு இடமில்லை.

-மகாத்மா காந்தி



**சமய நல்லிணக்கத்தை வளர்க்க என்ன செய்யலாம்?**

- உங்கள் ஊரில் நடைபெறும் பல்சமய திருவிழாக்களில் கலந்து கொள்ளலாம்.
- உலக அமைதி, சமய நல்லிணக்கம் பற்றிய உரையாடல்களை வகுப்பில் நிகழ்த்தலாம்.
- இந்தியாவில் உள்ள பல்வேறு சமயங்களின் சிறப்புகளை வகுப்பில் பகிரலாம்.
- சமய நல்லிணக்கக் கருத்துகளை வகுப்பில் காட்சிப்படுத்தலாம்.
- சமய நல்லிணக்கம் தொடர்புடைய பத்திரிகைச் செய்திகளை சேகரித்து வகுப்பில் பகிரலாம்.
- சமத்துவத்தை வளர்க்கும் வகையில் நல்லிணக்க உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம்.



**உங்களுக்குத் தெரியுமா?**



பல சமயங்களைக் கொண்ட நம் நாட்டில் சமத்துவமான சமூகத்தை உறுதிச்செய்ய சமயச் சார்பின்மை என்ற ஊர்தியை அரசமைப்பு தேர்வு செய்துள்ளது. சமயச் சார்பின்மை என்பது இந்திய அரசமைப்பின் **தவிர்க்க இயலா** அங்கமாகும் என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பின் வாயிலாக உறுதி செய்துள்ளது.

-எஸ்.ஆர்.பொம்மை வழக்கு *(1994)*

## பயிற்சிகள்

**1. உரக்கச் சொல்வோம்!**

1. நட்புணர்வைப் போற்றுவோம்! சகிப்புத்தன்மையை வளர்ப்போம்!
2. பன்மையைக் காத்தலே சமயச்சார்பின்மை!
3. சமயங்களுக்கிடையே சமத்துவத்தைப் போற்றுவோம்!
4. நல்லிணக்கம் பேணுவோம்! பகைமையைப் புறந்தள்ளுவோம்!
5. வேறுபாட்டை இயல்பு என்போம்! பாகுபாட்டை வன்முறை என்போம்!

**2. பல்சமய உரையாடல் நிகழ்த்துவோமா!**

- குழுவாகப் பிரிந்து இந்து, இசுலாம், கிறித்தவ, சீக்கிய, சமண, பௌத்த சமயங்களின் சிறப்புகளைப் பகிரவும்.
- சமய ரீதியான திருவிழாக்களின் போது பிற சமய நண்பர்களை அழைத்து வாழ்த்துக்களைப் பகிர்ந்துள்ளீர்களா? எடுத்துக்காட்டாக திருகார்த்திகை, ரம்சான், கிறிஸ்துமஸ் மற்றும் பிற விழாக்கள்.
- பிற சமய நண்பர்களுடன் இனிப்பு, உணவு மற்றும் பரிசுகளைப் பகிர்ந்துள்ளீர்களா?




பொங்கல் திருவிழா போன்ற தமிழர் விழாக்களை சாதி, சமய பேதமின்றி அனைத்து தரப்பினரும் தமிழகத்தில் கொண்டாடுகிறோம். சமயச் சார்பின்மைக்கு சமத்துவப் பொங்கல் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. நம் பள்ளிகளில், பகுதிகளில் சமத்துவப் பொங்கல் கொண்டாடி மகிழலாம்!

### 3. நண்பனுக்கு கடிதம் எழுது



குழந்தைகளே! உங்கள் சமயம் சார்ந்த பண்டிகைக்கு வேறு சமயத்தைச் சார்ந்த நண்பனை அழைக்க கடிதம் ஒன்று எழுதுங்கள். உங்கள் பண்டிகை எப்படி நடைபெறும் என்பதையும் அதன் சிறப்பையும் அதில் எழுதலாம்.

### 4. உங்கள் நிலைப்பாடு என்ன?

| | | | |
|---|---|---|---|
| 1 | சமயங்களைக் கடந்து நண்பர்களாகப் பழகலாம். | ஆம் | இல்லை |
| 2 | அனைத்துச் சமயத்தினரும் சமமானவர்கள். | ஆம் | இல்லை |
| 3 | சாதி, சமயம் பார்க்காமல் அனைவரும் சேர்ந்து உணவு உண்ணலாம். | ஆம் | இல்லை |
| 4 | திருவிழாக் காலங்களில் பிற சமய நண்பர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கலாம். | ஆம் | இல்லை |
| 5 | பிற சமயத் திருவிழாக்களில் கலந்து கொள்வேன். | ஆம் | இல்லை |
| 6 | பிற சமயத்தினரை புண்படுத்தும்படி பேசமாட்டேன் பிறர் பேசுவதையும் அனுமதிக்க மாட்டேன். | ஆம் | இல்லை |
| 7 | நம் நாடு வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடு என்பதை உறுதியாக ஏற்கிறேன். | ஆம் | இல்லை |

### 5. நாடகமாக்குங்கள்

**“சமய நல்லிணக்கத்தை”** மையப்படுத்தி நாடகம் ஒன்றை தயார் செய்து வகுப்பில் நிகழ்த்திக் காட்டவும்.



**“சமத்துவப் பொங்கல் திருநாள்”** கொண்டாட்டத்திற்கு வகுப்பறையில் அல்லது பள்ளி வளாகத்தில் ஏற்பாடு செய்யலாம்.

''சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
சத்திய சுத்த சன்மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுதல் உண்மை''

- வள்ளலார்



# 3 சமத்துவம்
## எல்லார்க்கும் எல்லாம் எனும் சமூகம்

**நோக்கங்கள்**

- சமத்துவம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ளுதல்.
- சமத்துவம் நிலவும் நாட்டில் பாகுபாடு இல்லை என்பதை அறியச் செய்தல்.
- சமத்துவம் எனும் மதிப்பீட்டை குழந்தைகள் தம் வாழ்நெறியாக ஏற்றுக் கொள்ளச் செய்தல்.



## ஆசிரியர்களுக்கான கற்றல் - கற்பித்தல் குறிப்புகள்

1. சமத்துவம் எனும் மதிப்பீட்டை குழந்தைகளுக்குக் கற்பிக்கவிருக்கும் ஆசிரியர்களுக்குச் சமத்துவம் பற்றிய சரியான புரிதல் தேவை.

2. பாடத்தில் உள்ள கதைகள், **உரையாடல்கள்,** சம்பவங்களை மையப்படுத்தி **பங்கேற்பு முறையில்** பாடத்தைக் கொண்டு செல்லலாம்.

3. குழந்தைகளிடம் காணப்படும் **சிறுசிறு முரண்களைக் களைந்து அவர்களிடையே சமத்துவ உணர்வை வளர்ப்பதாக** வகுப்பறை அமைதல் வேண்டும்.

4. சமத்துவத்திற்குத் தடையாக உள்ள காரணிகளை குழந்தைகளே அடையாளம் கண்டு அவற்றைக் களையும் வகையில் இப்பாடமும் அதன் பயிற்சிகளும் அமைதல் அவசியம்.



குழந்தைகளே!

எல்லோருக்கும் எல்லாம் எனும் இப்பாடத்தின் மூலம் சமத்துவம் எனும் மதிப்பீட்டை வளர்த்துக் கொள்ளப் போகிறோம்.

நம் நாடு 1947 ஆம் ஆண்டு விடுதலைப் பெற்றது என்பது நமக்குத் தெரிந்ததே. விடுதலையடைந்த நேரத்தில்

- கொடிய வறுமை மற்றும் பட்டினியால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.
- எழுத்தறிவின்மை அதிகளவில் இருந்தது.
- சாதி, சமய, இன, மொழி, பொருளாதாரம், பாலின அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும் நிறைந்திருந்தன.




**ஏற்றத்தாழ்வும் பாகுபாடும் நிலவும் எந்த சமூக அமைப்பிலும் சமத்துவம் மறுக்கப்படும்.**

மேற்கண்ட இப்பகுதியை உன்னிப்பாகப் படியுங்கள். மேலும் புரிந்து கொள்ள கீழ்க்கண்ட கதை உங்களுக்கு உதவும். கதையை வாசித்து வகுப்பில் உரையாட ஆசிரியர் உங்களுக்கு உதவுவார்.




**இரத்தத்தை உறிஞ்சும் கொசு**

கொசு ஒன்று ரீங்காரம் செய்து கொண்டு அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தது. அதன் முகத்தில் கோபமும், எரிச்சலும் தெரிந்தது.

வேறொரு கொசு ஒன்று அந்தப்பக்கம் வந்து சேர்ந்தது. அந்தக் கொசுவின் கோபத்தைக் கண்ட இக்கொசு, “ஏன் இத்தனைக் கோபத்துடன் காணப்படுகிறாய்?” என்று கேட்டது.

“அதை ஏன் கேட்கிறாய்? இந்த வீட்டுக்குள் வாழ்வோர் மின்விசிறி, கொசுவத்தி, கொசுவலை, போர்வை என பல பாதுகாப்புகளுடன் இருக்கிறார்கள். எனவே ஒரு சொட்டு ரத்தம் கூட குடிக்க வழியில்லாமல் சுற்றிச் சுற்றி வருகிறேன்” என்றது.

“இத்தனை சலிப்பு உனக்கு ஏன்? இலைச் சாறு குடித்துப் பழகு, ஒருவருக்கும் துன்பம் இல்லை”

அதற்கு அந்தக் கொசு சொன்னது: “அட! நீ ஒண்ணு, மனித இரத்தமே சுவைமிக்கது, ஆகா எத்தனை இன்பம்!”



கொசு அந்த வீட்டை விட்டு வெளியில் வந்தது. ஒரு சிறு குடிசை முன்னால், ஒரு திண்ணையில் ஒரு ஏழை மனிதர் படுத்திருந்தார். அவர் உடுத்தியிருந்த வேட்டியைத் தவிர உடலில் வேறு ஒன்றுமே இல்லை.

கொசு மகிழ்ச்சியாக அம்மனிதரை நோக்கிச் சென்றது. மெதுவாகக் கால் மேல் அமர்ந்து தன் வாயிலிருந்த ஊசி போன்ற கொடுக்கால் துளைத்து அவரது ரத்தத்தை உறிஞ்சியது.

**- சிறுவர்மலர்**




**வகுப்பில் விவாதிப்போமா!**

மேற்கண்ட கதையை வாசித்தீர்களா? வாசித்த நீங்கள் என்ன புரிந்துக் கொண்டீர்கள்?

- ***இரத்தத்தை உறிஞ்ச கொசு முதலில் யாரிடம் சென்றது?***
- ***அங்கு ஏன் கொசுவால் இரத்தத்தை உறிஞ்ச முடியவில்லை?***
- ***கொசு யாருடைய இரத்தத்தை எளிமையாக உறிஞ்சியது?***
- ***கொசு எளிதாக உறிஞ்சுவதற்கு எது காரணமாக இருந்தது?***
- ***இக்கதை உணர்த்தும் உண்மை என்ன?***

இக்கதையிலிருந்து நாம் வாழும் சமூகத்திற்கு...

- ***வசதி படைத்தோர் எவ்வகையான பாதுகாப்புகளோடு வாழ்கிறார்கள்?***

- ஏழை எளிய மனிதர்களுக்கு போதிய சமூகப் பாதுகாப்புகள் இருக்கின்றனவா?
- கொரோனோ போன்ற பெருந்தொற்றுச் சூழலில் கூட அதிகமாகப் பாதிக்கப்பட்டது யார்?

**ஆசிரியரின் உதவியுடன் வகுப்பறையில் உரையாடவும்**

1. நீங்கள் வாழும் பகுதியில் எவ்வகையான ஏற்றத்தாழ்வுகள் உள்ளன?
2. வறுமையால் வாடுவோர் எதையெல்லாம் இழக்கின்றனர்?
3. எந்தெந்த வழிகளில் எல்லாம் எளிய மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்?

சமத்துவக் கொள்கையே உயிர் என கருதி அனைத்து வளங்களும், வாய்ப்புகளும் பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றார் பாவேந்தர் பாரதிதாசன். பாடலைத் தனியாகவும் சேர்ந்தும் பாடுவோமா?.

புதியதோர் உலகம் செய்வோம்! கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!
பொதுவுடமைக் கொள்கை திசை எட்டும் சேர்ப்போம்!
புனிதமோடு அதை எங்கள் உயிர் என்று காப்போம்!
இதயம் எலாம் அன்பு நதியினில் நனைப்போம்!
இது எனது என்னும் கொடுமையைத் தவிர்ப்போம்.



- புதிய உலக செய்வோம், பாரதிதாசன் கவிதைகள்.



**சமூகநீதி**

ஏற்றத்தாழ்வுடைய சமூகம் சமத்துவ சமூகமாக இருக்க இயலாது. சமத்துவம் மறுக்கப்பட்ட சமூகத்தில் சமூக நீதி இல்லை. நமக்கு வேண்டுவதெல்லாம் எல்லார்க்கும் எல்லாம் கிடைக்க வழிவகை செய்யும் சமூக நீதி.

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற ஏற்றத்தாழ்வு நிறைந்த நாட்டில்

அனைவருக்கும் ஒரே வகையான வாய்ப்புகளைத் தரமுடியுமா? அது உண்மையான சமத்துவமாக இருக்குமா? எடுத்துக்காட்டாக ஒரு தடகள ஓட்டப் பந்தயத்தில் நல்ல உடல் திடத்துடன் இருக்கும் மாணவனுடன் ஒரு திடமில்லாத மாணவனை சமமாக ஓடவிடுவது சரியாக இருக்குமா? சமமான போட்டிக்கு இது அடையாளமா?

## நிகழ்வுகள்

***சமூக நீதியைப் புரிந்து கொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வை இரண்டு பேர் உரக்க வாசியுங்கள். வாசித்தப் பிறகு குழந்தைகள் அனைவரும் தங்கள் அனுபவங்களுடன் இணைந்து தங்கள் கருத்துகளைப் பகிரவும்.***



அன்பு என்ற மாணவன் பேருந்து வசதி இல்லா ஒரு குக்கிராமத்திலிருந்து படிக்க வருகிறான். ஆனால் பிரதாப் என்ற மாணவனோ உள்ளூரில் நல்ல வசதி படைத்த குடும்பத்திலிருந்து வருகிறான்.

அன்புவின் பெற்றோர் எழுத்தறிவு பெறாத விவசாயக் கூலிகளாக உள்ளனர். அதிகாலையிலேயே எழுந்து காட்டு வேலைக்குச் சென்றுவிடுவார்கள். பிரதாப்பின் பெற்றோரோ சொந்தமாக வியாபாரம் செய்கிறார்கள். பிரதாப் வீட்டு வேலைகளைச் செய்ய பல வேலையாட்களும் உள்ளனர்.



இரவு மிச்சம் உள்ள உணவுதான் அன்புவிற்கு மறுநாள் காலை உணவாகும். பிரதாப்பிற்கோ காலையில் சுடச்சுட பலகாரங்களைச் சமைத்துப் பரிமாறுவார்கள். வகை வகையான மதிய உணவை வீட்டில் இருந்தே பிரதாப் கொண்டு வந்துவிடுவான். ஆனால் அன்பு பள்ளியில் கொடுக்கப்படும் மதிய உணவை மட்டுமே நம்பியிருக்கிறான்.

அன்பு பள்ளி முடிந்து வீட்டிற்குச் செல்வதற்குள் இருட்ட ஆரம்பித்துவிடும். ஆனால் பிரதாப்பை

அழைத்துச் செல்ல வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் பள்ளி முடிந்ததும் வேகமாக வீட்டிற்குச் சென்று சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு விளையாடச் சென்றுவிடுவான்.

அன்புவிற்கு அவன் பெற்றோர் கூலி வேலைக்குச் சென்று இரவு வீட்டிற்கு திரும்பி வந்து உணவு சமைத்தால் தான் பசியை ஆற்ற முடியும். ஆனால், பிரதாப் மாலை விளையாடிய பிறகு வீட்டிற்குச் சென்று அன்றைக்கு பள்ளியில் நடத்திய பாடங்களைப் படித்ததும் இரவு உணவிற்குச் செல்வான்.

**வகுப்பில் விவாதிப்போமா?**

1. இரண்டு பேரும் ஒரே பள்ளியில்தான் படிக்கின்றனர். இருவரும் சமமானவர்களா?
2. இருவருக்கும் ஒரே மாதிரியான வசதிகளும் வாய்ப்புகளும் கிடைக்கிறதா?
3. ஏழை மாணவனான அன்பு எதையெல்லாம் இழக்கிறான்?
4. வகுப்பறையில் அன்புவையும் பிரதாப்பையும் ஒரே மாதிரியாக நடத்த முடியுமா?
5. பிரதாப் போன்று அன்புவிற்கும் அனைத்து வாய்ப்புகளும் கிடைக்க என்ன வழி?

## சமத்துவமின்மையை எவ்வாறு போக்கலாம்?

**சேர்ந்து வாசிப்போமா?**



கஞ்சி குடிப்பதற்கிலார் அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே!

-பாரதியார்

ஒயில் : துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே! என்ற பாரதியின் வார்த்தையின் பொருள் என்ன? அதற்குத் தீர்வுதான் என்ன?

ஆசிரியர் : காலங்காலமாக ஒதுக்கப்பட்ட மக்களின் துயர்களைத் தீர்க்க இந்திய அரசமைப்பு தற்காலிகத் தீர்வு ஒன்றை முன்வைத்தது.

சமமற்ற சமூகத்தில் சமநீதியை உருவாக்க அரசமைப்பு நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படும் வாய்ப்புகளில் ஒன்றுதான் **இடஒதுக்கீடு.** இந்த இடஒதுக்கீடு நம் சமூகத்தில் காலங்காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்படும் சலுகை அல்ல; மாறாக இது அவர்களின் உரிமை.

குருவன் : எப்படி வறுமை மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் களைவது?

ஆசிரியர் : ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட நம் நாடு. எல்லோருக்கும் எல்லாம் என்ற சமதர்மக் கொள்கையை தனது அரசமைப்பு முகப்புரையில் கொண்டுள்ளது. அதனடிப்படையில் குடிமக்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கும் மக்கள் நல அரசாக உருவானது.

சல்மா : மக்கள் நல அரசு என்றால் என்ன? கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்கள்.

ஆசிரியர் : நாட்டின் வளங்கள் குடிமக்கள் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். அனைவருக்கும் சம வாய்ப்பளிக்கும் அரசு தான் மக்கள் நல அரசு. மக்கள் அனைவரும் அடிப்படை வாழ்க்கைத் தரத்துடன் வாழ்வதை உறுதி செய்யும் அரசுதான் மக்கள் நல அரசாக இருக்கும்.



துருவன் : மக்கள் நல அரசில் மக்களுக்கு என்னவெல்லாம் உறுதி செய்யப்படும்?

ஆசிரியர் : அனைவருக்கும் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, நல்ல வசிப்பிடம், குடிநீர், உணவு, சமூகப் பாதுகாப்பு, பெண்களுக்கு சம ஊதியம், பொதுப் போக்குவரத்து மற்றும் எண்ணற்ற சமூக நலத் திட்டங்கள் வாயிலாக மக்களின் அடிப்படை உரிமைகளும், கண்ணியத்தோடு வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். சமத்துவம் நோக்கிய பயணத்தில்தான் ஒரு மக்கள் நல அரசின் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

நம் சிந்தனைக்கு



ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் வரையில் சமத்துவம் என்ற இலட்சியம் வெறும் கனவுக் காட்சியாகத்தான் இருக்கும். சாதியால், மதத்தால், குலத்தால், அரசியல் நிலையால், ஏழை பணக்காரன் என ஏற்றத்தாழ்வுகள் பல வகையாகக் காட்சியளிக்கிறது. சமத்துவ, சமுதாயத்தைக் காண வேண்டுமானால் முதலில் சாதிப் பாகுபாடு தொலைந்தாக வேண்டும்”

- அறிஞர் அண்ணா

### சமத்துவமும் இந்திய அரசமைப்பும்

அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இந்தியக் குடிமக்களாகிய நாம், இறையாண்மையுள்ள, சமதர்ம, சமயச் சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசை உருவாக்குவோம் என நமக்கு நாமே பிரகடனப்படுத்தினோம். சோசலிச, சமத்துவ சமூகத்தை வளர்த்தெடுக்க குடிமக்கள் மற்றும் அரசு முன்னெடுக்க வேண்டிய பணிகளை அது வலியுறுத்துகிறது.

#### சமத்துவம் பற்றி அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது?

***பிரிவு 14***

சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

***பிரிவு 15***

சாதி, சமயம், இனம், பாலினம், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த ஒரு தனி நபரையும் அரசும் குடிமக்களும் பாகுபடுத்தக் கூடாது.

***பிரிவு 16***

அரசு வேலைவாய்ப்புகளில் அனைவர்க்கும் சமவாய்ப்புகள் வழங்கப்பெற வேண்டும்.

நம் சிந்தனைக்கு



"தரையில் உறங்குகிறான் ஒருவன். பாயில் படுத்திருக்கிறான் மற்றொருவன். இதில் சமத்துவம் இல்லை. இந்த ஏற்றத்தாழ்வை இரண்டு விதங்களில் போக்கலாம். பாய் விரித்து உறங்குபவனிட மிருந்து பாயைப் பிடுங்கிக்கொண்டு அவனையும் தரையில் படுக்க வைப்பது. இது ஒரு முறை. புதிதாக ஒரு பாயை வாங்கி தரையில் படுத்திருப்பவனும் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்தலாம். இதன் மூலமே சமவாழ்வு சமுதாயத்தை அமைக்க முடியும்" - பெருந்தலைவர் காமராசர்

**குழந்தைகளே!**

சமமான பகிர்வைப் புரிந்துக் கொள்ள சிறு உரையாடலை வகுப்பில் நிகழ்த்துவோமா?

முருகன் : எவையெல்லாம் நாட்டின் வளங்கள்?

சூசை : நீர், நிலம், காற்று, சூரிய ஒளி, கடல், ஆறுகள், ஏரிகள், குளங்கள், காடுகள், கனிமங்கள், இன்னும் பிற உள்ளூர் வளங்கள், இவை அனைத்தும் பொது வளங்களே!

முகம்மது : அப்படி என்றால், நாட்டின் இந்த வளங்கள் மக்கள் அனைவருக்கும் சொந்தமானதா?

பாணன் : ஆம், மக்கள் அனைவருக்கும் சொந்தமானதுதான். நாட்டின் பொது வளங்கள் சாதி, சமய, பொருளாதாரம், இனம் கடந்து மக்கள் அனைவருக்கும் பொதுவானது. எந்த ஒரு தனி நபரும் இந்த வளங்களை முழுமையாகச் சொந்தம் கொண்டாட முடியாது; ஆக்கிரமிக்க முடியாது.

அருள் : வேறு என்னென்ன வளங்கள் மக்களுக்கு உரியன?

அசரப் : சந்தைகள், பொதுச் சாலைகள், இரயில், பேருந்துப் போக்குவரத்துகள், பொழுதுபோக்குப் பூங்காக்கள்,

விளையாட்டுத் திடல்கள், சமுதாயக் கூடங்கள், மக்கள் பயன்பாட்டிற்கான பொது இடங்கள், அரசுப் பள்ளிகள், அரசு மருத்துவமனைகள், அரசு உயர்கல்வி நிறுவனங்கள் போன்ற இவை அனைத்தும் மக்கள் அனைவருக்கும் உரியன.

பர்வீன் : ஓ...! இவை எல்லாவற்றையும் அனைத்து மக்களும் பாகுபாடு இல்லாமல் பயன்படுத்த முடியும்! இது சரி! இன்னொரு கேள்வி ஆட்சி அதிகாரத்தில் மக்களின் பங்கேற்பு எவ்வகையில் உள்ளது?

சித்ரா : உள்ளாட்சி நிர்வாகம் முதல் நாடாளுமன்றம் வரை அனைத்து மக்களின் பங்கேற்பும் இடஒதுக்கீடு மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும், பெண்களும் அரசியலில் பங்கேற்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

நானிலன் : அப்படியானால் அனைத்துப் பிரிவினரும் ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்கும் வாய்ப்பு இருக்கும், அப்படித்தானே! சரி. மக்களுக்கான அரசு எப்படி இருக்க வேண்டும்?

நிலவன் : மக்களை மையப்படுத்தியே ஓர் அரசு இயங்க வேண்டும். அரசின் திட்டங்கள் மக்கள் நலன் கருதி அமையும் போதுதான், அனைத்து மக்களின் பங்கேற்பு ஆக்கப்பூர்வமாக இருக்கும். ஓர் அரசின் நிர்வாகத்தில் அனைத்து தரப்பு மக்களின் பங்கேற்பும் இருக்கும் போதுதான் அந்த அரசு மீது நம்பிக்கை வளரும். அதுதான் மக்களுக்கான அரசு என்று சொல்ல முடியும்.






**உங்கள் சிந்தனைக்கு**

1. மேலே உள்ள படத்தைப் பார்த்ததும், உங்களுக்கு என்ன தோன்றுகிறது? உங்கள் கருத்துக்கள் என்ன?
2. உள்ளாட்சி முறைகளில் இடஒதுக்கீடு உள்ளதா? யாருக்கெல்லாம் இடஒதுக்கீடு உள்ளது?
3. உங்கள் பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பாட்டிற்கான பொது இடங்களை அனைத்து தரப்பினரும் பயன்படுத்த உரிமை உள்ளதா? முழுமையாக பயன்படுத்தும் நிலை உள்ளதா?
4. உங்கள் ஊராட்சி அல்லது நகராட்சிப் பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் என்னென்ன திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன?
5. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான சிறப்புத் திட்டங்கள் எவை?

## பெண்ணடிமைத்தனம் ஒழிய தந்தை பெரியார் காட்டும் வழி



எல்லோரும் சமத்துவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் தந்தை பெரியார். பெண் விடுதலையை வலியுறுத்தி எண்ணற்ற பல போராட்டங்களை முன்னெடுத்தார். ஜவுளிக் கடையில் காட்சிப்படுத்தப்பட்ட பொம்மைகள் போன்று அல்லாமல் நாட்டிற்கும், சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்ற முடியும். ஒரு தாய் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளில் பெண் குழந்தைகளுக்கு மட்டும் ஏன் பாகுபாடு காட்டப்படுகிறது என்ற கேள்வியைத் தொடர்ந்து எழுப்பி வந்தார்.

"பெண்களின் ஆற்றலைப் பயன்படுத்தாமல் முடக்குவது நாட்டிற்கும் சமூகத்திற்கும் நட்டம்தானே. ஒவ்வொரு பெண்ணிற்கும் கல்வியும் தொழிலும் இரு கண்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் பிறரைச் சார்ந்திருக்காமல் சுயமரியாதையுடன் வாழ வழி கிடைக்கும். ஆகவே ஒவ்வொரு பெண்ணும் கல்வி பெறுவதுடன் ஒரு தொழிலையும் கற்றுக் கொள்வது அவசியம்" என்றார்.

**இந்தியாவில் சமத்துவம் இல்லா சூழல்**

- இந்தியாவின் பெரும் பணக்காரர்கள் 1 விழுக்காட்டு நபர்களிடம், நாட்டின் 40.5% சொத்துகள் குவிந்திருப்பதாகவும், அடித்தட்டில் உள்ள 50 விழுக்காட்டு மக்களிடம் வெறும் 3% சொத்துக்களே உள்ளன.
- இந்தியாவின் முதல் 10% செல்வந்தர்களின் சொத்துகள் 1981-க்கும் 2012-க்கும் இடைப்பட்ட காலத்தில் 45% விழுக்காட்டிலிருந்து 63% விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதே காலக்கட்டத்தில் அடித்தட்டில் உள்ள 50% மக்களின் சொத்துகள் பாதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

- ஆக்ஸ்ஃபாம் ஆய்வறிக்கை, 2023



உங்களுக்குத் தெரியுமா?

**சமத்துவம் மற்றும் சமூகநீதிக்கான அரசின் சமூகநலத் திட்டங்கள்**

1. தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் காலை மற்றும் மதிய உணவு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.
2. அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கட்டணமில்லா கல்விக்கான உபகரணங்கள் பல வழங்கப்படுகின்றன.
3. அரசுப் பேருந்துகளில் மாணவர்களுக்கும் மகளிருக்கும் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.
4. அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிக்குச் செல்லும் மாணவியருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம்.
5. முதியோர் மற்றும் துணை இழந்தோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.
6. அரசின் நியாய விலைக் கடைகளில் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.







முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

## பயிற்சிகள்

**1. புதிய வார்த்தைகளைப் பழகுவோம்!**

சோசலிசம், சமதர்மம், சமூகநீதி, குடிமக்கள், சனநாயகம், ஏற்றத்தாழ்வு, வறுமை, சுரண்டல், அடிமைமுறை, விடுதலை, வன்முறைகள், கூட்டுறவு, கூடிவாழ்தல்.

**2. உரக்கச் சொல்வோம்!**

1. வளங்கள் அனைத்தும் அனைவருக்கும் என்போம்!
2. வளங்களைப் பகிர்வோம்!சமத்துவத்தை நிலைநாட்டுவோம்!
3. சமூகநீதியைஅடிப்படை உரிமை என்போம்!
4. அரசு நிர்வாகத்தில் பங்கேற்க அனைவர்க்கும் உரிமை உண்டு என்போம்!
5. ..............................................................................
6. ..............................................................................
7. ..............................................................................
8. ..............................................................................

**3. கதை, கவிதை, கட்டுரை எழுதுவோமா?**



- **"எனது கிராமம் ஏழ்மையில்லா கிராமம்"** என்ற தலைப்பில் ஒரு கதையை இரண்டு பக்க அளவில் எழுதி வகுப்பில் பகிரவும்.



- **"புதியதோர் உலகம் செய்வோம்"** என்ற தலைப்பில் கவிதை ஒன்றை எழுதி வகுப்பில் பகிரவும்.

- **“சமூக நீதிக்கான பயணத்தில் இடஒதுக்கீட்டின் அவசியம்”** என்ற தலைப்பில் மூன்று பக்க அளவில் ஒரு கட்டுரை எழுதி வகுப்பில் வாசிக்கவும்.



### 4. கோடிட்ட இடங்களை நிரப்பவும்

1. நாட்டின் வளங்கள் அனைத்தும் அனைவருக்கும்..........................
2. கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் அனைவர்க்கும் ............................ ................................. வழங்கப்பட வேண்டும்.
3. மக்களுக்கான அரசில் ................................ பங்கேற்பு இருக்க வேண்டும்.
4. இடஒதுக்கீடு................................மாற்றத்திற்கான கருவியாகும்.
5. நாட்டில் ஏற்றத்தாழ்வுகள் ஒழிய...................................அவசியம்.
6. ஆணுக்கும் பெண்ணுக்கும்......................ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.
7. குறைந்த கூலி கொடுத்து அதிக வேலை வாங்குவதற்கு பெயர் ....................

### 5. வகுப்பில் விவாதிக்கலாம்

உங்கள் கிராமத்தில் உள்ள பொதுவளங்களான ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், காடுகள், விளையாட்டுத் திடல்கள், சமுதாயக் கூடங்கள் போன்ற பொதுப் பயன்பாட்டிற்கான இடங்கள் எல்லார்க்கும் பொதுவானவையாக உள்ளனவா? என்று விவாதிக்கவும்.



“எல்லார்க்கும் தேசம்; எல்லார்க்கும் உடைமை எலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக”

-பாரதிதாசன்

நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் - இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் - இந்தப்
பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்"

-பாரதியார்



# 4 இறையாண்மை

## தனித்துவம் போற்றுவோம்!

### நோக்கங்கள்

1. இறையாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளல்.
2. இறையாண்மையின் கூறுகளை விரிவாக அறிந்துகொள்ளுதல்.
3. குடிமக்களின் இறையாண்மையை நாட்டின் இறையான்மை என்பதை புரிந்து கொள்ளல்.



## ஆசிரியர்களுக்கான கற்றல் - கற்பித்தல் குறிப்புகள்

1. இறையாண்மை என்னும் சொல் மக்களின் அன்றாடம் பயன்படுத்தும் வழக்கு சொல் அல்ல. எனவே குழந்தைகள் புரிந்துக் கொள்ளும் வகையில் எளிமைப்படுத்தி அதனை விளக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

2. ஆசிரியரின் விரிவுரையை குறைத்துக் கொண்டு, **குழந்தைகள் விவாதிக்கவும், உரையாடவும், மனம் திறந்து பேசவும், கேள்வி எழுப்பவும்** வகுப்பறையில் கூடுதல் நேரத்தை ஒதுக்குவதே சிறப்பாக அமையும்.

3. இப்பாடத்தில் இறையாண்மைபற்றியும் இறையாண்மையுள்ள நாட்டின் குடிமக்கள் அனைவரும் இறையாண்மை மிக்கவர்கள் என்பதையும் சான்றுகளோடு விளக்குவது அவசியம்.

4. அரசமைப்புச் சட்ட முகப்புரையில் இடம்பெறும் மிக முக்கிய கருத்தான இறையாண்மையை குழந்தைகள் எளிதாக விளங்கிக் கொள்ளும் வகையில் உரையாடல், விவாதம், நாடகம், பாடல்கள் என பல்வேறு வகையான முறைகளைப் பயன்படுத்தி இப்பாடத்தை நடத்தலாம்.



**அறிமுகம்**

**குழந்தைகளே!**

இப்பாடத்தில் இறையாண்மை பற்றித் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

**இறையாண்மை என்பது நாட்டின் நிலப்பரப்பை மட்டும் குறிப்பதில்லை.**

**நிலப்பரப்பையும் தாண்டி குடியரசில் வாழும் மக்களையும் குறிப்பது.**

**சுருக்கமாகச் சொன்னால் 'குடிமக்களின் இறையாண்மையே நாட்டின் இறையாண்மை'.**

**குடிமக்கள் ஒவ்வொருவரும் இறையாண்மை உள்ளவர்கள்; ஆனாலும் நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டு நடக்கக் கடமைப்பட்டவர்கள்.**

**குடிமக்கள்தம் தனித்த அடையாளங்கள், மாண்பு, சுதந்திரம், மற்றும் புகழை பாதுகாத்துக் கொள்ள உரிமை உள்ளவர்கள்.**

**இந்தியா உலக நாடுகளுடன் உறவு கொண்டிருந்தாலும் இந்தியாவின் இறையாண்மையைக் காக்க உரிமையுண்டு**

இந்தியா சுதந்திரம் பெறா நிலையில் இறையாண்மை கொண்ட நாடாக இல்லை. அந்நியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்ததால் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நம்முடைய சுதந்திரமும் உரிமைகளும் கட்டுப்படுத்தப்பட்டன. நம்முடைய நலன்களைக் காட்டிலும் ஆங்கிலேயர்களின் நலனே முதன்மையாகக் கருதப்பட்டது. உரிமைக் குரல் எழுப்பப்படும் போதெல்லாம் அதை அடக்கி ஒடுக்குவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

இறையாண்மை கொண்ட நாடாக இல்லை என்பதால்தான் ஜாலியன் வாலாபாக் படுகொலை போன்ற மிக மோசமான வன்முறைகள் நம் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டன.

## ஜாலியன் வாலாபாக் நிகழ்வை நீங்கள் அறிந்துள்ளீர்களா?




பிரிட்டிஷ் அரசு கொண்டு வந்த ரவுலட் எனும் கொடூரமான சட்டத்தை நம் மக்கள் கடுமையாக எதிர்த்தனர். ஏனெனில் இச்சட்டம் நமது நலனுக்கான சட்டம் அல்ல. அது ஆங்கிலேயரின் நலனுக்காக உருவாக்கப்பட்ட சட்டம். இச்சட்டத்தின் மூலம் காரணமின்றி மக்களைக் கைது செய்தல், சிறையில் அடைத்தல், பயணங்களைத் தடை செய்தல், சுதந்திரமாக எழுதவும், பேசவும் தடைவிதித்தல் என பல மனித உரிமை மீறல்கள் நிகழ்த்தப்பட்டன. இதனை எதிர்த்து ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில் கூடிய பெருந்திரள் மக்கள் கூட்டத்தில் ஜெனரல் டயர் என்பவரின் உத்தரவின்பேரில் இராணுவத்தினர் கண்மூடித்தனமாக சுட்டதில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் உயிரிழந்த சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.

### உங்கள் சிந்தனைக்கு

1. ஜாலியன் வாலாபாக் படுகொலை நமக்கு உணர்த்துவது என்ன?
2. இந்திய மக்கள் மீது ஏன் இது போன்ற மோசமான துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்பட்டது?
3. உரிமைகளை அனுபவிக்கும் சூழல் காலனிய ஆட்சியில் இருந்ததா?
4. இதே போன்ற கொடூரமான சட்டங்கள் சுதந்திர இந்தியாவில் உள்ளனவா?

ஜாலியன்வாலா பாக் போன்ற எண்ணற்ற கொடுந்துயர்களை எதிர்கொண்டு நம் நாடு விடுதலை அடைந்தது. விடுதலை பெற்ற நாம் நமக்கான அரசமைப்புச் சட்டத்தை இயற்றினோம். இவ்வரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் நம்மை நாமே ஆளும் அதிகாரம் முழுவதும் நம்மிடம் வந்தது.

**"நாட்டிற்கு வெளியிலிருந்து எவ்வித தலையீடுகளும், குறுக்கீடுகளும் இல்லாமல் சுதந்திரமான மக்களாட்சி நாடாக இயங்கத் தொடங்கியது" பிற குறுக்கீடுகள் இல்லாத முழுமையான ஆட்சி அதிகாரத்தை ஒரு நாடு கொண்டிருப்பதையே இறையாண்மை என்று அழைக்கிறோம்.**

### அரசமைப்பும் மக்களாட்சியும்



"அந்நியத் தலையீடுகள் ஏதுமின்றி நம்மை நாம் ஆள்வதே" இறையாண்மை என்று பார்த்தோம். அரசமைப்புச் சட்டத்தால்தான் மக்களின் இறையாண்மை உறுதி செய்யப்படுகிறது. குடிமக்களின் உரிமைகளும் அவர்தம் சுதந்திரமும் மக்களாட்சியில்தான் பாதுகாக்கப்படுகின்றன.

இறையாண்மையை மேலும் புரிந்து கொள்ள ஆசிரியரின் உதவியுடன் இவ்வுரையாடலை சிறு நாடகமாக நிகழ்த்துவோமா?

ஆனந்தன் : நண்பா! முகநூல், வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களைப் பார்க்கிறாயா?

செங்கதிர் : ஆம், நிறைய பார்க்கிறேன். ஆனால், பார்ப்பதை நிறுத்த முயல்கிறேன்.

ஆனந்தன் : ஏன் பார்ப்பதை நிறுத்தப் போகிறாய்? ஏதாவது சிக்கல் உள்ளதா?




செங்கதிர் : அதெல்லாம் ஒன்றும் இல்லை. சமூக ஊடகங்களில் தற்போது தனி நபர்களையும் அவர்களின் குடும்பங்களையும் தேவையற்ற விதத்தில் விமர்சிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது.

ஆனந்தன் : அதிலென்ன பிரச்சனை நண்பா? அதுதானே இன்றைய போக்காக உள்ளது.

செங்கதிர் : அதுதான் தவறு என்கிறேன். மனிதர்கள் அனைவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். ஒவ்வொரு தனிநபருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் சில அந்தரங்கங்கள் உண்டு; தனி உரிமைகள் உண்டு; தனித்த அடையாளங்கள் உண்டு.

ஆனந்தன் : எந்தெந்த வடிவில் தனிநபர்கள் அல்லது குடும்பங்களின் அந்தரங்க உரிமைகள் மீறப்படுகின்றன என்று சொல்வாயா?

செங்கதிர் : தனிநபர்களின் ஒளிப்படங்களை அவர்களின் அனுமதி இல்லாமல் பகிர்வது, பிறரது ஒளிப்படங்களைத் தவறாகச் சித்தரிப்பது, அவர்களது குடும்ப உரையாடல்களைப் பகிர்வது, தேவையின்றி தனிப்பட்ட ஆவணங்களைப் பகிர்வது, உரையாடல்களை ஒட்டுக் கேட்பது, ஒலி,ஒளி

பதிவு செய்து வெளியிடுவது, ஒருவரைப் பற்றி அவதூறாகப் பேசுவது, பிறரை மிரட்டுவது, பயமுறுத்துவது போன்ற வகையில் அந்தரங்க உரிமைகள் மீறப்படுகின்றன.

ஆனந்தன் : அப்படியெனில் ஒருவரின் குடும்ப பிரச்சனைகளில் இன்னொருவர் தலையீடக்கூடாதா?

செங்கதிர் : தலையிடக் கூடாது என்று சொல்லவில்லை. குடும்பத்தில் உள்ள ஒருவருக்குப் பாதிப்பு அல்லது இவரால் பிறருக்குப் பாதிப்பு ஏற்படும் போது தலையீடலாம். ஆனால், எவ்வித காரணமும் இன்றி ஒருவரின் அந்தரங்கத்தில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை.

இதைத்தான் நமது அரசமைப்புச் சட்டமும் நீதிமன்றங்களும் உறுதி செய்துள்ளன. அந்தரங்க உரிமை என்பது மனிதரின் அடிப்படை மனித உரிமையாகும். ஒவ்வொரு தனி நபரும் அவர்தம் குடும்பத்தினரும் இறையாண்மை கொண்டவர்கள். ஒவ்வொரு குடிமகளும் குடிமகனும் இறையாண்மை மிக்கவர்கள்.

தனிநபர்களின் இறையாண்மையில் தலையிட அல்லது குறுக்கிட யாருக்கும் உரிமையில்லை. குடிமக்கள் ஒவ்வொருவரும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை தாங்கியவர்கள்.

நாட்டிற்கு இறையாண்மை உள்ளதுபோல தனிநபர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கும் இறையாண்மை உண்டு.

**உரையாடலாம், வாருங்கள்!**

1. தனிநபர்கள் அல்லது குடும்பங்களின் விஷயங்களில் இன்னொருவர் தலையிடலாமா?
2. அதே வேளையில் பக்கத்து வீடுகளில் குடும்ப வன்முறைகள் நிகழும் போது தலையிடாமல் இருக்கலாமா?
3. உரையாடல் மூலம் புரிந்து கொண்டதை நாட்டின் இறையாண்மையுடன் ஒப்பீட்டு கூறுங்கள்.



## இறையாண்மையின் பரிமாணங்கள்




### 1. பன்மையும் இறையாண்மையும்



இந்தியா ஒரு பன்மைக் குணம் கொண்ட நாடு என்பதை நாம் அறிவோம். இப்பன்மைக் குணங்களைக் கொண்ட இந்தியச் சமூகம் தன் தனித்த அடையாளங்களைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் உரிமையுடையது. குடிமக்களின் இத்தனித்துவத்தைப் பாதுகாப்பதே இறையாண்மை கொண்ட அரசின் முதன்மை நோக்கமாகும்.

### 2. தன் மரியாதையும் இறையாண்மையும்



குடிமக்கள் அனைவரும் மாண்பும் சுதந்திரமும் உடையவர்கள். சுதந்திரமான இந்தியாவில் அனைத்துச் சூழலிலும் அனைவரும் கண்ணியத்தோடு நடத்தப்பட வேண்டும்.

### 3. தேர்வு செய்யும் உரிமையும் இறையாண்மையும்

சுதந்திரமான நியாயமான தேர்தல் மூலம் தமக்கான அரசைத் தெரிவு செய்வதற்கான உரிமையும், தேர்தலில் வென்று அரசில் பங்கேற்பதற்கான உரிமையும் உண்டு. எவ்வித பாகுபாடுகளும் இன்றி அனைத்துக் குடிமக்களுக்கும் இதுபோன்று தேர்தலில் போட்டியிடும் உரிமையையும், தான் விரும்பும் வேட்பாளரைத் தேர்வு செய்யும் உரிமையையும் அரசமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ளது.



### 4. தற்சார்பும் இறையாண்மையும்

தனக்கான அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தனித்தன்மையுடன் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை இறையாண்மை கொண்ட அரசிற்கு உண்டு. நாட்டின் எல்லைகள், நிலம், நீர் மற்றும் வளங்கள் என அனைத்தின் மீதான உரிமையும் இறையாண்மையின் உள்ளடக்கம்தான்.





**உங்களுக்குத் தெரியுமா?**




**சட்டத்தின் முன் அனைவரும் சமம். எவ்விதப் பாகுபாடுமின்றி சட்டத்தின் முன் சம பாதுகாப்பைப் பெறும் உரிமை அனைவருக்கும் உண்டு. இப்பிரகடனத்தை மீறுகின்ற வகையில் மனிதரிடமிருந்து மனிதரைப் பாகுபடுத்துதல் அல்லது பாகுபடுத்தத் தூண்டுதல் என்பனவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்ற உரிமை அனைவருக்கும் உண்டு.**

***- பிரிவு 7, அகில உலக மனித உரிமைப் பிரகடனம், 1948***

### ஐ.நா அவையும் இறையாண்மையும்

சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடுகளின் கூட்டமைப்பே ஐக்கிய நாடுகள் அவை. இதில் 193 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. பிற நாடுகளின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையிலான ஆக்கிரமிப்புகள், போர்கள், மனித உரிமை மீறல்களைத் தடுத்தல் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாக்கும் வகையில் நாடுகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குதல், நாடுகளில் நிலவும் இன, மொழி, சமயப் பாகுபாடுகளைக் களைந்து, உறுப்பு நாடுகளுக்கு இடையில் நல்லிணக்கமும் அமைதியும் நிலவச் செய்தல் போன்ற பணிகளை ஐ.நா அவை மேற்கொள்கிறது.




**நம் சிந்தனைக்கு**

1. இறையாண்மை கொண்ட, சுதந்திரமான ஒரு நாடு தனது சொந்த மக்களைப் பாகுபடுத்துவது, ஈவு இரக்கமின்றி கொல்வது போன்ற கொடுஞ் செயல்களைச் செய்தால் ஐ.நா அவை உள்ளிட்ட அமைப்புகள் தலையிடலாமா?
2. இலங்கையில் வசிக்கும் ஈழத் தமிழர்களை இலங்கை ராணுவம் 2008-2009 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கில் ஈவு இரக்கமின்றி கொன்று குவித்தது. கொடூரமான போர்க்குற்றங்களில் ஈடுபட்டது. தமிழர்களின் இறையாண்மை சிதைக்கப்பட்டது. அங்கு நடந்த இனப் படுகொலையை தமிழக சட்டமன்றம் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. ஐ.நா அவையும் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. இதுகுறித்து உங்கள் கருத்து என்ன?
3. மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரமும் ஒரு நாட்டின் சட்டங்களுக்கு மட்டும் உட்பட்டதா? அல்லது உலகளாவிய உரிமைகளா?

## பயிற்சிகள்

**1. புதிய வார்த்தைகளைப் பழகுவோம்!**

இறையாண்மை, தனித்துவம், சுயமரியாதை, தற்சார்பு, அந்நியத் தலையீடு, அந்தரங்க உரிமை, அவதூறு, குறுக்கீடுகள், சகிப்புத்தன்மை, தேர்வு செய்யும் உரிமை, சமூக ஊடகங்கள், இனப்படுகொலை, போர்க்குற்றங்கள்

**2. உரக்கச் சொல்வோம்!**

a. நாம் சுதந்திரமானவர்கள், உரிமையும் சுதந்திரமும் எம் உயிர் மூச்சு என்போம்!

b. தற்சார்பும், தன் மரியாதையும் இரு கண்கள் என்போம்!

c. ..........................................................................................

d. ..........................................................................................

e. ..........................................................................................

**3. உங்கள் அனுபவங்களைப் பகிருங்கள்**

"எனது தனித்த அடையாளங்கள்" என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உங்கள் அனுபவங்களை எழுதி குழுவில் பகிர்ந்து கொள்ளவும்.



**4. கட்டுரை எழுதவும்**

"மக்களுக்கான இறையாண்மை எது?" என்ற தலைப்பில் இரு பக்க அளவில் கட்டுரை ஒன்றை எழுதுதல்.

**5. சரியான கூற்றைத் தெரிவு செய்யவும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | என்னுடைய தனித்த அடையாளங்களைக் காப்பது எனது அடிப்படை உரிமை | சரி | தவறு |
| 2. | நான் சுதந்திரமானவன். ஆனாலும், என் சுதந்திரம் சட்டத்திற்கு உட்பட்டது. | சரி | தவறு |
| 3. | சட்டங்களுக்கு உட்பட்டு நடப்பவர்கள்தான் குடிமக்கள். | சரி | தவறு |
| 4. | தனிநபர்களின் அந்தரங்கங்களில் குறுக்கீடு செய்வது. | சரி | தவறு |
| 5. | சாதி, சமய, மொழி, பாலினம் அடிப்படையில் பாகுபடுத்துவது இறையாண்மைக்கு எதிரான செயல். | சரி | தவறு |
| 6. | நாட்டின் சுதந்திரப் போராட்டத்தைப் போற்றுவது குடிமக்களின் கடமை | சரி | தவறு |
| 7. | சமூக ஊடகங்களில் பிறரின் தனிப்பட்ட வாழ்க்கையை மோசமாக விமர்சிப்பது | சரி | தவறு |
| 8. | குடிமக்கள் அனைவரும் தன்மானமும் இறையாண்மையும் கொண்டவர்கள். | சரி | தவறு |





குடியாட்சி என்பது ஆட்சிமுறை மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை நெறி.

- அறிஞர் அண்ணா

# 5 குடியரசு

## குடிகளே குடிமக்களாக

**நோக்கங்கள்**

1. குடியரசின் முக்கிய கூறுகளைத் தெரிந்து கொள்ளுதல்
2. குடியரசுதான் சனநாயகத்தின் முழுமை என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
3. குடிமக்களுக்கு அரசமைப்பு அளித்திருக்கும் உரிமைகளை அறிந்து கொள்ளல்.



**ஆசிரியர்களுக்கான கற்றல் - கற்பித்தல் குறிப்புகள்**

1. இப்பாடத்தின் வாயிலாக குடியரசு பற்றி தெரிந்து கொள்வதுடன் அதன் அவசியத்தைக் குழந்தைகளுக்குப் புரிய வைத்தல்.

2. குடியாட்சி என்பது **ஒரு அரசியல் கருத்து மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை நெறி** என்ற எண்ணத்தை குழந்தைகளிடம் உருவாக்க வேண்டும்.

3. குடியாட்சியின் சிறு வடிவமாக நமது வகுப்பறை அமையும் வகையில் நமது கற்பித்தல் செயல்பாடுகளைப் பங்கேற்பு முறையில் வடிவமைத்துக் கொள்ளவும்.



**அறிமுகம்**

*குழந்தைகளே!*

இதுவரை மக்களாட்சி, இறையாண்மை, சமயச் சார்பின்மை, சமத்துவம் ஆகியன பற்றி அறிந்து கொண்டோம். இப்பாடத்தில் குடியரசு என்றால் என்ன? ஒரு குடியரசு நாட்டில் நாம் யாராக, எப்படி இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்வோமா?



மன்னராட்சி முடிந்து குடியாட்சி உருவானதுதான் சமூகத்தில் நடந்த மிகப்பெரிய புரட்சி. "நான் எவ்வாறு ஒரு அடிமையாக இருக்க மாட்டேனோ அவ்வாறே ஒரு எஜமானனாகவும் இருக்க மாட்டேன்" என்றார் ஆப்ரகாம் லிங்கன். இந்தத் தத்துவத்தின் மீது கட்டப்படுவதே உண்மையான குடியாட்சி. அறிவும், தெளிவும், துணிவும் மக்களிடம் இருந்தாலன்றி, குடியாட்சியின் பயனை முழுமையாக அடைய முடியாது. குடியாட்சி வெற்றி பெற வேண்டுமென்றால், அதன் மாண்புக்கு ஊறு நேரிடாதபடி பாதுகாத்திடும் திறன், மக்களுக்கும் இருக்க வேண்டும். அத்தகைய திறனை மக்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.



## மன்னராட்சிக்கும் குடியாட்சிக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள்

| மன்னராட்சி | குடியாட்சி |
|---|---|
| ஒற்றையாட்சி | கூட்டாட்சி |
| மக்கள் "குடிகள்" | மக்கள் "குடிமக்கள்" |
| மன்னன் ஆள்கிறான் | ஒரு கட்சி அரசாள மக்கள்தான் வாய்ப்பை வழங்குகின்றனர். |
| தனி மனிதனின் விருப்பமே சட்டமாக மாறுகிறது. | மக்களின் விருப்பமும் தேவையும் தான் சட்டமாக மாறுகிறது |
| அரண்மனையில் ஆட்சியதிகாரம் | மக்களிடமே ஆட்சியதிகாரம் (நாடாளுமன்றம், சட்டமன்றம்) |
| மன்னன் உயர்ந்தால் நாடு உயரும் | மக்களின் வாழ்வு உயர்ந்தால் தான் நாடு உயரும் |

### நம் சிந்தனைக்கு



"குடியாட்சி எனும் முறையை புகுத்தி விட்டால் மட்டும் போதாது. குடியாட்சியில் கோமான்கள் தோன்றாதபடி, தோன்ற முடியாதபடி, பாதுகாப்புத் தேடியபடி இருந்தாக வேண்டும். விழிப்புணர்வு நிரம்ப வேண்டும். தெளிவும் துணிவும் பெருமளவு வேண்டும். ஆள வந்தவர்களை அமர்த்தி விட்டதுடன் நமது பொறுப்புத் தீர்ந்து விட்டது என்ற எண்ணம் மனதைத் தாலாட்டும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. நம்மால் அனுமதிக்கப்பட்டு நமக்காக நாடாள்பவர்கள், நமது நலனைப் பேணிடும் முறையில் ஆட்சி செய்து வருகிறார்களா என்று கவனித்துக் கொள்ளும் திறன் வேண்டும்".

- அறிஞர் அண்ணா.



உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

(நீங்காத பசித்துன்பமும், தீராத நோய்களும், தாக்க வரும் பகைவர்களும் தன்னைச் சேராமல், வலிமையோடும் வளமோடும் விளங்குவதே, நல்ல நாடாகும்)

குறள்-734

மக்களே ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொண்டுள்ள அமைப்பைத்தான் சனநாயகம் (Democracy) என்கிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அரசமைப்புதான் குடியரசு (Republic) என்று அழைக்கிறோம்.

### சுதந்திர தினமும் குடியரசு தினமும்

நமது நாடு 1947-ம் ஆண்டு விடுதலைப் பெற்றாலும் அதனை முழுமையான விடுதலை என்று சொல்ல முடியாது. ஏனெனில் நம்மை நாம் எவ்வாறு ஆளுவது என்பது குறித்த தெளிவான சட்டங்களோ, அமைப்புகளோ அப்போது இல்லை. 1950-ம் ஆண்டு சனவரி 26-ம் நாளில் நமக்கான அரசமைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி முழுமையான விடுதலை பெற்ற குடியரசு நாடாக அறிவித்தோம். இந்நாளில்தான் நாம் நமக்கான அரசைப் பெற்றோம்.




"எவ்விதமான அந்நிய நாட்டுத் தலையீடோ, குறுக்கீடோ இன்றி தனக்கான அரசமைப்புச் சட்டத்தையும்,




மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும் ஒரு நாடு கொண்டிருந்தால் அது குடியரசு நாடாகும்". நம் நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களால் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒன்றிய அரசின் ஆலோசனையுடன் இந்திய குடியரசின் முதல் குடிமகன் அல்லது முதல் குடிமகளாக குடியரசுத் தலைவர் செயல்படுவார்.

| | |
|---|---|
| அதிகாரக் குவியல் **சர்வாதிகாரம்** | நமக்குத் தேவை எது??? |
| அதிகாரப் பரவல் **சனநாயகம்** | |

**குடிமக்கள் அனைவரும் வேறுபட்டவர்களே**

| இனத்தால் | சமயத்தால் | மொழியால் | பாலினத்தால் |
|---|---|---|---|

அவர்கள் அனைவரும் ஒற்றைப் பண்பு உடையவர்கள் அல்லர். மேற்கண்ட பண்புகளால் இவர்கள் வேறுபட்டவர்களாயினும் சமமானவர்களே. இதுவே குடியாட்சியின் மகத்துவம்.

நம் சிந்தனைக்கு



"குடியாட்சி என்பது மன்னனின் மணிமகுடத்தைப் பறித்துவிடுவது மட்டுமல்ல, மக்கள் எந்தவிதமான பேதத்திலும் சிக்கிக் கொள்ளாமல் பாதுகாப்பாக வாழ்வதாகும். குடியாட்சி என்பது ஆட்சிமுறை மட்டுமல்ல, அனைவரும் சமம் என்ற நெறியை வளர்க்கும் முறையாகும். இது எழிலார்ந்த வாழ்க்கை முறை. இது ஒரு சமத்துவத் தோட்டம்"

அறிஞர் அண்ணா

**குடியரசின் அடிப்படைப் பண்புகள்**

1. ஏற்றுக் கொள்ளும் பண்பு
2. அங்கீகரிக்கும் பண்பு
3. அனைவரையும் உள்ளடக்கிய குடியுரிமை
4. பரவலாக்கப்பட்ட அதிகாரம்
5. கூட்டாட்சி முறை
6. அனைவருக்கும் வாக்குரிமை
7. தன்னாட்சி பெற்ற அமைப்புகள்
8. சுதந்திரமான நீதித்துறை
9. நியாயமான தேர்தல்
10. சுதந்திரமான ஊடகம்
11. கருத்துரிமை மற்றும் பேச்சுரிமை
12. குடிமைச் சமூகங்களை வலுப்படுத்துதல்
13. சங்கம் அமைக்கவும், கூடவும் உரிமை



## உங்களுக்குத் தெரியுமா?




**நாட்டின் அரசதிகாரத்தில் நேரடியாகவோ சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கேற்க அனைவருக்கும் உரிமையுண்டு. அரசுகள் மக்களின் நம்பிக்கையைத் தேர்தல்கள் மூலம் தொடர்ந்து பெற வேண்டும். இத்தேர்தல்கள் இரகசியமாக இருத்தல் வேண்டும். வாக்குரிமை எல்லோருக்கும் சமமாக இருத்தல் வேண்டும். தன் நாட்டின் அரசுப் பணியில் சமவாய்ப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. மக்களும் அரசும் ஒருவருக்கொருவர் பதில் சொல்லும் பொறுப்பு உண்டு என்பதும் மிகப் பெரிய கடமையாகும்.**

***- பிரிவு 21, அகில உலக மனித உரிமைப் பிரகடனம் 1948***

### யாரெல்லாம் இந்தியக் குடிமக்கள்?

1. இந்தியாவில் பிறந்து இந்தியாவிலே வசிப்பவர்கள் அனைவரும் இந்தியக் குடிமக்கள்.
2. இந்தியாவில் பிறக்காமல் இந்தியாவில் வாழ்பவர்கள்; ஆனால் அவர்களின் பெற்றோரில் எவரேனும் ஒருவர் இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும்.
3. இந்தியாவில் பிறக்காமல் இந்தியாவில் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக வசிப்பவர்கள்.
4. இந்தியப் பிரிவினையின் போது பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்கள்.
5. இந்தியாவிற்கு வெளியே வசிப்பவர்கள்; இவர்கள் இந்தியாவில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும் அல்லது பெற்றோரில் ஒருவர் இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும்.

## குடிமக்களின் காவல் அரண்கள் எவை?

1. குடியுரிமை
2. சட்டத்தின் ஆட்சி
3. தெரிவு செய்யும் உரிமை
4. அடிப்படை மனித உரிமைகள்

## அரசமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள குடிமக்களின் உரிமைகள்

### சமத்துவ உரிமை



- சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தின் சம்மான பாதுகாப்பினை அரசு எந்தவொரு நபருக்கும் மறுக்கக் கூடாது.
- மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் அடிப்படையில் அரசு பாகுபாடு காட்டக் கூடாது.
- பொது வேலைவாய்ப்புகளில் அனைவருக்கு சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது. எந்த வடிவிலும் தீண்டாமையைக் கடைபிடிப்பது தண்டனைக்குரிய குற்றம்.

### குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள்



- பேச்சு மற்றும் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு சுதந்திரம்.
- அமைதியாகக் கூடுவதற்கான உரிமை
- சங்கம் அமைப்பதற்கான உரிமை
- இந்திய எல்லைக்குள் சுதந்திரமாகச் சென்று வருவதற்கான உரிமை
- விரும்பிய தொழிலைச் செய்யவும், வணிகம் செய்யவும் உரிமை



### வாழ்வுரிமை

- கண்ணியமாக வாழ்வதற்கான உரிமை
- அனைவருக்கும் கல்வி உரிமை

**காரணமின்றி கைது, சட்டப்புறம்பான காவல் கூடாது**



- காரணமின்றி எவர் ஒருவரையும் கைது செய்யக்கூடாது.
- கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் நீதித்துறை நடுவர் முன் அந்த நபரை நிறுத்திட வேண்டும்.
- தனக்கு எதிராக சாட்சியம் வழங்க ஒருவரைக் கட்டாயப்படுத்தக்கூடாது.
- ஒரே குற்றத்திற்கு இருமுறை தண்டனை வழங்கக்கூடாது.

**சுரண்டலுக்கு எதிரான உரிமை**



- மனிதர்களை விற்பது, வாங்குவது மற்றும் அனைத்து வகையான கொத்தடிமை முறைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.
- 14 வயதிற்குட்டபட்ட சிறார்களை எந்தத் தொழிற்சாலையிலும், பிற அபாயகரமான தொழிலிலும் ஈடுபடுத்தக் கூடாது.

**சமயம் மற்றும் பண்பாட்டு உரிமைகள்**



- அனைவரும் அவரவர் மனசாட்சிப்படி நடக்கவும் அவர் விரும்பும் சமயத்தினைப் பின்பற்றவும் உரிமை. பொது அமைதி, ஒழுங்கு, சுகாதாரம் ஆகியவற்றிற்கு உட்பட்டு ஒரு சமயத்தைத் தழுவ, பின்பற்ற, பரப்ப உரிமை.
- எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தினையும் வளர்க்க அல்லது பராமரிக்க ஆகும் செலவினங்களுக்கு எவரையும் வரி செலுத்துமாறு கட்டாயப்படுத்தக் கூடாது.
- குடிமக்கள் தங்களது மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமை உண்டு.
- மொழி, சமயச் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் நிறுவவும் நிர்வாகிக்கவும் உரிமை.



**நிவாரணம் பெறும் உரிமை**

- அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது நீதி நிவாரணம் பெறும் உரிமை.



குடியாட்சி பற்றி முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் கூறும்போது, இந்தியாவில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற நாடாளுமன்ற சனநாயக முறை நம் தலைவர்களின் ஆழமான சிந்தனையிலிருந்து உருவான ஒன்றாகும். இந்திய அரசமைப்பின் வரைவுக்குழுத் தலைவரான அண்ணல் அம்பேத்கர் அவர்களும் நாடாளுமன்ற சனநாயகத்தையே விரும்பினார். இல்லையெனில் இந்திய அரசும் சர்வாதிகார அரசாக மாறுவதற்குரிய வாய்ப்புகள் உண்டு என்று அஞ்சினார்.

நாம் அனைவரும் குடிமக்களாக இருந்தாலும் அடிப்படையில் வேறுபட்டவர்கள். நாட்டில் பல்வேறு நிலைகளில் பாகுபாடுகளும் உரிமை மீறல்களும் நிறைந்தே காணப்படுகின்றன. எனவே வேறுபாடுகளும் பாகுபாடுகளும் உள்ள நாட்டில் உண்மையான சமத்துவ நிலையை அடைய நாமும் வேறுபட்ட அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்.

## எந்த சூழ்நிலையில் குடியாட்சி முறை நிலைத்து நிற்காது?

- எது நல்லது? எது கெட்டது? என்பதைக் கண்டறியும் திறன் இல்லாத மக்கள் வசிக்கும் நாட்டில் குடியாட்சி நீடிக்காது
- அடிமைச் சமூகத்தில் - அடிபணிவோர் நிரம்பிய சமூகத்தில் குடியாட்சி முறை நிலைத்து நிற்காது.
- அதிகாரத்திற்கான கருவிகளாக அரசு அமைப்புகளைப் பயன்படுத்தும் ஆட்சியாளர்கள் இருக்கும் இடத்தில் குடியாட்சி நிலைக்காது.
- சாதி, மத, ஏழை-செல்வந்தர், ஆண்-பெண் என பிளவுபட்டு, பாகுபாடுகள் நிறைந்த சமூகத்தில் குடியாட்சியைப் புகுத்தினாலும் நிலைக்காது.
- பிளவுகள் நிரம்பிய சமூகத்தில் "ஒருவருக்கு ஒரு ஓட்டு" என்பதால் மட்டும் சமத்துவமும், உண்மையான குடியாட்சியும் உருவாகிவிடாது.
- குடியாட்சி முறைக்குப் பழக்கப்படாத சமூகத்தில் குடியாட்சி நிலைபெறாது.



**வேலோடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலோடு நின்றான் இரவு.**

(ஆட்சியில் இருப்பவர்கள் தமது குடிமக்களிடம் அதிகாரத்தைக் காட்டிப் பொருளைப் பறிப்பது, வேல் ஏந்திய கொள்ளைக்காரனின் மிரட்டல் போன்றது))

குறள்-552

## குடியாட்சி மேம்பட நாம் என்ன செய்ய வேண்டும்?

- குடியாட்சி என்பது வெறும் தேர்தல் அரசியல் முறை என்று மட்டுமே பார்க்காமல் அது ஒரு வாழ்க்கை நெறி என்ற புரிதல் நம்மிடம் வளர வேண்டும்.
- குடியாட்சியின் முழுப்பொருளையும் அதன் வடிவத்தையும் நன்கு புரிந்து நல்ல குடிமக்களாக செயலாற்ற வேண்டும்.
- "எல்லோரு சமம்" என்ற சிந்தனை நம் மனதில் வளர வேண்டும்.
- சாதி, சமய, பாலின அடிப்படையில் நிலவும் பாகுபாடுகளை நம் சமூகத்தில் ஒழித்துக்கட்டும் பணியை நாம் மேற்கொள்ள வேண்டும்.
- எந்த விதத்திலும் எவர் மீதும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது.
- நமது அன்றாட செயல்களிலும், எண்ணத்திலும் குடியாட்சிப் பண்புகள் வெளிப்பட வேண்டும்.
- ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் பொறுப்போடும், பொது நலத்தோடும் பணி ஆற்றுகிறார்களா என்று கண்காணிக்க வேண்டும்.

## பயிற்சிகள்

1. **உண்மையான குடியரசு மலர அவசியமானவை எவை? ஒதுக்க வேண்டியவை எவை? என்று பிரித்தறிக.**

கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளில் உள்வட்டத்தில் அவசியமான பண்புகளையும் வெளிவட்டத்தில் ஒதுக்க வேண்டிய கூறுகளையும் எழுத வேண்டும்.

சமத்துவம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒருவர் ஒருவரை மதித்தல், வேற்றுமைகளை ஏற்றுக் கொள்ளுதல், பதில் கூறுதல், சமூக நல்லிணக்கம், சாதி வெறி, பாகுபாடுகள், மதவெறி, நியாயமாக நடத்தல், வெளிப்படைத்தன்மை, ஊழல், ஆதிக்கம், முரண்பாடுகள், சுரண்டல், அடிப்படை உரிமைகள், சட்டத்தின் முன் சமம், பாலின பேதம், இனவெறி, அங்கீகரித்தல், சர்வாதிகாரம்



2. உரையாடுவோமா!



எல்லா மனிதர்களையும் சம நிலையில் வைத்துப் பார்க்க வேண்டும்; எல்லார்க்கும் சம உரிமையும், சம உடைமையும் நல்கும் அமைப்பாக நம் குடியரசு விளங்க வேண்டும். "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற பாரதியின் கருத்தினை நனவாக்க நாம் என்ன செய்யலாம் என்று உரையாடுவோம்.

3. குழந்தைகள் நாடாளுமன்றம்

வகுப்பை நாடாளுமன்றமாகச் சித்தரித்து வகுப்பில் உள்ள குழந்தைகள் அனைவரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகக் கருத வேண்டும். அதில் 5 முதல் 10 நபர்களை அமைச்சர்களாக அனைவரும் சேர்ந்து அல்லது ஓட்டு போட்டு தேர்ந்தெடுத்து, அதில் ஒருவரைப் பிரதமராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசமைப்பின் மீது உறுதிமொழி எடுத்த பிறகு தங்களுடைய துறைச் சார்ந்த திட்டங்களை (எ.கா- கல்வி, குழந்தைகள் நலன், பெண்கள் நலன், நிதி) கூட்டத்தில் பகிர வேண்டும். உறுப்பினர்களும் நாட்டின் நலனை மையப்படுத்தி அவர்களிடம் கேள்விகளைக் கேட்பார்கள். இதுபோன்ற சிறு நிகழ்வு மூலம் குடியாட்சி முறையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம்.



**4. சரியான கூற்றைத் தேர்வு செய்க**

| | | | |
|---|---|---|---|
| *1.* | மக்கள் அனைவரும் பங்கு பெறும் ஆட்சிதான் சிறந்த ஆட்சி | சரி | தவறு |
| *2.* | சட்டங்களுக்கு உட்பட்டு நடப்பவர்கள்தாம் குடிமக்கள் | சரி | தவறு |
| *3.* | ஊரில் முக்கிய நபர்கள், பணக்காரர்கள் மட்டும் கிராம ஊராட்சித் தலைவராக இருப்பது | சரி | தவறு |
| *4.* | அரசமைப்புச் சட்டம் மக்களைச் சமமாகப் பார்க்கிறது | சரி | தவறு |
| *5.* | குடிமகன்/மகள் என்ற முறையில் நான் விரும்பினால் தேர்தலில் நிற்கலாம். | சரி | தவறு |
| *6.* | மன்னர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அல்லர் | சரி | தவறு |
| *7.* | மனித மனங்களைப் பிரிக்கும் சுவர்களாக சாதி, மத, இன, பாலின பேதங்கள் உள்ளன. | சரி | தவறு |
| *8.* | நண்பர்களைவிட சாதி பெரியதல்ல | சரி | தவறு |

**5. விடுபட்ட இடங்களை பூர்த்தி செய்து வார்த்தைகளை முழுமைப்படுத்து**

*1.* குடி........ட்சி

*2.* அனை........ரும் ச........ம்

*3.* சட்........தின் ஆ........சி

*4.* சர்வா........காரம்

*5.* சம பங்........ற்பு

*6.* சமத்........வம்

*7.* சகோ........ரத்........வம்

*8.* சன........யகம்

6. **நீங்கள் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டால் உங்கள் ஊருக்கு என்னென்ன செய்வீர்கள்?**

ஊராட்சி மன்றத் தலைவராகிய ............................ என்ற நான் எனது கிராமத்திற்கு

*1* ...........................................................................................

*2* ...........................................................................................

*3* ...........................................................................................



**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்.**

(முறையாக ஆட்சி செய்து மக்களைக் காப்பாற்றும் மன்னன், அம்மக்களுக்குத் தெய்வம் என்று சொல்லப்படும் உயர்நிலையிலே வைத்து மதிக்கப்படுவான்)

குறள்-388





தாமதிக்கப்படும் நீதி, மறுக்கப்படும் நீதி

-மார்டின் லூதர் கிங் ஜுனியர்

# 6 அனைவருக்கும் நீதி

**நோக்கங்கள்**

1. நீதி பெறுதல் ஓர் உரிமையே என்பது இப்பாடத்தில் விளக்கப்படுகிறது. நீதிபெறும் உரிமை என்பதைப் புரிந்து கொள்ளல்.
2. நீதி பெறும் உரிமையை நமது அரசமைப்புச் சட்டமும் பன்னாட்டு அமைப்புகளும் எவ்வகையில் உறுதி செய்துள்ளன என்பதை அறிந்து கொள்ளல்.
3. நீதி நிவாரணம் வழங்கும் அமைப்புகளை நாம் அணுகும் முறைகளைத் தெரிந்து கொள்ளுதல்.



## ஆசிரியர்களுக்கான கற்றல் – கற்பித்தல் குறிப்புகள்

1. இப்பாடத்தின் வாயிலாக நீதிபெறும் உரிமை பற்றி குழந்தைகள் தெரிந்து கொள்ள எளிய முறையில் புரிய வைக்க முயற்சி செய்யவும்.

2. குழந்தைகள் அனைவரும் பங்கேற்கும் வகையில் **உரையாடல் வழிக் கற்பித்தல் செயல்பாடுகளை** முன்னெடுக்கலாம்.

3. பயிற்சிகள் பகுதியில் தரப்பட்டுள்ள அனைத்துப் பயிற்சிகளையும் எளிய முறையில் குழந்தைகளுக்குப் புரிய வைக்கவும்.

4. குழந்தைகள் மூலம் நீதி பெறும் முறை குறித்த செய்திகளை குழந்தைகளின் குடும்பங்களிலும், அவர்கள் வாழும் சமூகத்திலும் சென்று சேரும் வகையில் இப்பொருள் பற்றிய அறிவைக் குழந்தைகளுக்குத் தருக.

5. இப்பாடத்தில் சட்டம் சார்ந்த கருத்துகளும் சொற்களின் பயன்பாடும் அதிகமாக இருப்பதால், பொருளறிந்து குழந்தைகளுக்கு எளிதில் புரியும் வகையில் வகுப்பறைச் செயல்பாடுகள் இருத்தல் நன்று!



## அறிமுகம்

**குழந்தைகளே!**

அனைவருக்கும் நீதி என்பது குறித்தும், நீதி பெறும் உரிமை என்ன என்பது குறித்தும், நமக்கு நீதி மறுக்கப்படுகையில் எங்கு யாரை எவ்வகையில் அணுகிப் பெறலாம் என்பதனையும் இப்பாடத்தில் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

இப்பாடத்திற்குள் செல்வதற்குமுன் கீழ்க்கண்ட கேள்விகளின் அடிப்படையில் சிறு உரையாடலை வகுப்பறையில் ஆசிரியரின் உதவியுடன் நிகழ்த்துவோமா?

1. மரத்தடியில் ஊர்ப் பஞ்சாயத்து நடக்கும் காட்சிகளை திரைப்படங்களில் பார்த்துள்ளீர்களா? அது பற்றி உங்கள் கருத்து என்ன?



2. திரைப்படங்களில் வரும் பஞ்சாயத்துக் கூட்டங்களில் யார் முடிவுகளை எடுக்கின்றனர்?
3. அவ்வாறு எடுக்கப்படும் முடிவுகள் நியாயமானதாக உள்ளனவா?
4. இக்கூட்டங்களுக்கு தலைமை வகிப்போர் யார்? குறிப்பிட்ட சாதியத் தலைவரா? பணக்காரரா? ஊரில் செல்வாக்கு மிகுந்த நபரா?
5. பொதுவாக உங்கள் பகுதியில் பாதிக்கப்படுபவர்கள் எங்கு சென்று யாரிடம் புகார் செய்வார்கள்?

### சட்டவிரோத கிராமப் பஞ்சாயத்து

கிராமங்களில் ஆதிக்கம் செலுத்துபவர்கள் தங்களின் அதிகாரங்களை கிராமப் பஞ்சாயத்து வாயிலாக தக்கவைத்துக் கொள்கின்றனர். அவர்களின் உத்தரவுகளே கிராமத்திற்கான ஒழுங்கு விதிகளாக உள்ளன. அவர்கள் விதிக்கும் இவ்விதிகளுக்கு மாறாக நடந்து கொள்பவர்களுக்கு தண்டம் விதிப்பதோடு, தண்டனைகள் வழங்கி ஊரை விட்டு ஒதுக்கி வைத்தல், ஊர்ப் புறக்கணிப்பு போன்ற செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இதுபோன்ற நிகழ்வு சமீபத்தில் தென்காசி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நடைபெற்றது. ஊடகங்களில் பரவலாக இது விவாதிக்கப்பட்டது. ஊரில் நிகழ்ந்த ஒரு பிரச்சனை காரணமாக ஒரு தரப்பினர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். புகார் கொடுத்த காரணத்தாலே அவர்களுக்கு அந்த ஊரில் பல்வேறு வகைகளில் தடைகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக அந்த குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகளுக்கு சாக்லெட், பிஸ்கட் உள்ளிட்ட தின்பண்டங்கள்கூட கடைகளில் வழங்க அக்கடைகளை நடத்தும் பிற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மறுத்துவிட்டனர்.



### உரையாடலுக்கான கேள்விகள்

1. இதுபோன்ற சமூக புறக்கணிப்பு, ஒதுக்குதல் மற்றும் பாகுபாடுகள் சரியா?
2. காவல்துறை, நீதிமன்றங்கள் உள்ளிட்ட சட்டரீதியான அமைப்புகள் செயல்படும்போது, சட்டவிரோத ஊர்க் கூட்டங்கள் போட்டு சிலருக்கு தண்டனை வழங்குவது சரியா?
3. இவ்வாறு நடக்கும் ஊர்க்கூட்டங்களில் அனைவருக்கும் உரிய நீதி கிடைக்குமா?
4. நாம் பாதிக்கப்படும்போது எங்கு புகார் செய்ய வேண்டும்?

## ஜெய்பீம் திரைப்படத்தில்-நீதி கிடைப்பதற்கான வழி வகைகள்.




ஜெய்பீம் என்ற தமிழ்த் திரைப்படத்தைப் பார்த்திருப்பீர்கள். படம் பார்த்த சக நண்பர்கள் அல்லது ஆசிரியர் கதையைச் சுருக்கமாகப் பகிர்ந்துக் கொள்ளலாம். பகிர்விற்குப் பிறகு கீழ்க்கண்ட கேள்விகளை முன்வைத்து வகுப்பில் உரையாடுங்கள்.

1. உண்மைக் கதையைத் தழுவி எடுக்கப்பட்ட ஜெய்பீம் திரைப்படம் நமக்கு தரும் செய்தி என்ன?
2. இப்படத்தில் யாரெல்லாம், எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர்?
3. ஒரு குறிப்பிட்ட பழங்குடி மக்களை திருடர்களாக முத்திரை குத்தலாமா?
4. செங்கேணி உள்ளிட்ட கதாபாத்திரங்கள் எம்மாதிரியான வன்முறைகளுக்கு உள்ளாகின்றனர்?
5. உரிமை இழந்த மக்கள் யாரை நம்புகின்றனர்?
6. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்கு, எவ்வகையில் நீதி கிடைக்கிறது?
7. நம்முடைய அன்றாட வாழ்வில் இதுபோன்ற சூழல் ஏற்பட்டால் நாம் என்ன செய்வோம்?

குழந்தைகளே! ஆசிரியரின் உதவியுடன் மேலே எழுப்பப்பட்ட கேள்விகளுக்கான பதில்களை கரும்பலகையில் எழுதவும்.



நீதிமன்றங்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றைப் வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.

## நீதி பெறும் உரிமை என்றால் என்ன?

சட்டத்தின் ஆட்சி நடைபெறும் நாட்டில் நீதி பெறும் உரிமை ஓர் அடிப்படை மனித உரிமையாகும்.

- நீதி மறுக்கப்படும் மனிதர் தம் மாண்பினையும் சுதந்திரத்தையும் இழப்பர்.



- மக்கள் தங்கள் உரிமைகளை அனுபவிக்க முடியாமல் போகும்.



- பாதிக்கப்படுவோர் குரலற்றவர்களாக வாழ்வர்.



- அநீதியை எதிர்த்துப் போராட முடியாத நிலை ஏற்படும்.



எனவே “தங்களின் அடிப்படை உரிமைகள் என்ன என்று தெரிந்து கொண்டு, அவை பாதிக்கப்படுகையில் அவற்றை உரிய வகையில், உரிய இடத்தில் பெறுவதைத்தான் நீதி பெறும் உரிமை” என்கிறோம்.

## சட்டத்தின் ஆட்சியும் நீதி பெறும் உரிமையும்



இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை சமூகப் பொருளாதார, அரசியல் என அனைத்து நிலைகளிலும் “**அனைவருக்கும் சமமான நீதி**” என்று வலியுறுத்துகிறது. நம் நாட்டில் “**நீதி பெறும் உரிமை**” அனைத்து குடிமக்களுக்குமான அடிப்படை மனித உரிமையாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமம். மக்கள் அனைவரும் சாதி, மதம், இனம், பாலினம், பிறப்பிடம், பொருளாதாரம் என எதனடிப்படையிலும் பாகுபாடு காட்டப் பெறாமல் அனைவருக்கும் சமமான நீதி பெறுதலை அரசமைப்புச் சட்டம் உறுதி செய்கிறது.

**நீதி அனைவருக்கும்**

- எளிதில் கிடைக்க வேண்டும்.
- அணுகக்கூடியதாக இருக்கவேண்டும்.
- விரைவாகக் கிடைக்க வேண்டும்.

**உங்களுக்குத் தெரியுமா?**




**வெளிப்படையான நீதி விசாரணை**

நீதி விசாரணைகள் வெளிப்படையாக நடைபெற வேண்டும். விசாரிக்கப்படும் நீதிபதி எவ்வித நிர்பந்தத்திற்கும் ஆளாகிவிடக் கூடாது. ஒருவர் செய்யாத குற்றத்திற்காக ஒருவரைப் பழி வாங்கவோ, தண்டனை வழங்கவோ யாருக்கும் உரிமையில்லை.

*-பிரிவுகள் 10 மற்றும் 11, அகில உலக மனித உரிமைப் பிரகடனம், 1948*





## உங்களுக்குத் தெரியுமா?

### இலவச சட்ட உதவி

இலவச சட்ட உதவி பெறுவதற்கான உரிமை அடிப்படை மனித உரிமையாகும். பொருளாதாரமின்மை அல்லது பிற இயலாமையினால் ஒருவருக்கான நீதி பெறும் வாய்ப்பைப் பறிக்கக்கூடாது என்பதால் நீதிமன்றமே அவருக்காக தகுதி வாய்ந்த ஒரு வழக்குரைஞரை நியமிக்க வேண்டும்.

-உச்சநீதிமன்றத் தீர்ப்பு

### நாம் எங்கு நீதி பெறுவது?








1. காவல் நிலையத்தில் புகார் செய்வது நீதி பெறும் உரிமையின் தொடக்கப் புள்ளியாகும். புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து உரிய சட்ட நடைமுறைகளின்படி புலன் விசாரணை செய்து, நீதிமன்றத்திற்கு வழக்கைக் கொண்டுச் செல்வார்கள் அல்லது
2. நேரடியாகவும் நீதிமன்றங்களை அணுகலாம்.
3. குழந்தைகள் பாதிக்கப்படும் போது சிறார் சிறப்புக் காவல் துறையினர், இளஞ் சிறார் நீதிக் குழுமங்கள், குழந்தைகள் நலக் குழுக்கள், தேசிய, மாநில குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையங்களையும் அணுகலாம்.
4. தேசிய, மாநில மனித உரிமை ஆணையங்களை அணுகலாம்.



5. பெண்கள் பாதிக்கப்படும் போது மகளிர் காவல் நிலையங்கள், மகளிர் ஆணையங்கள், பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையம், மகளிர் நீதிமன்றங்கள், சமூக நலத்துறையின் பாதுகாப்பு அலுவலர்கள், மகளிர் உதவி சேவை எண்-181 போன்ற அமைப்புகளை அணுகலாம்.



6. நுகர்வோராக சேவைக் குறைபாடுகள் இருந்தால் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களை அணுகலாம்.

7. பட்டியல் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதிக்கப்பட்டால் காவல் நிலையத்தை அணுகி நீதி நிவாரணம் பெறலாம். தேசிய, மாநில பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆணையங்களை அணுகலாம்.



8. தேசிய, மாநில மற்றும் மாவட்ட, வட்டார அளவில் இயங்கும் இலவச சட்ட உதவி மையங்களை அணுகலாம்.

**அரசமைப்பின் "இதயம் மற்றும் ஆன்மா"**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 32வது பிரிவு என்பது அரசமைப்பின் "**இதயமும் ஆன்மாவும் ஆகும்**" என்று அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் அல்லது மீறப்படும் பட்சத்தில் எந்த ஒரு குடிமகனும் உச்ச நீதிமன்றத்தை அணுகி நீதி நிவாரணம் பெற வழிவகுக்கிறது.

## சமநீதியும் இலவச சட்ட உதவியும்



வறுமையாலும் வசதியின்மையிலும் நீதிமன்றங்களை அணுக இயலதாவர்களுக்கு நீதி மறுக்கப்படக் கூடாது என்பதால் இலவச சட்ட உதவியை அரசே வழங்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இந்த அடிப்படையில் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் இயங்கி வருகின்றன.



**உங்களுக்குத் தெரியுமா?**

**விரைவான விசாரணைக்கான உரிமை**

விசாரணையின்றி நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்படல் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 21க்கு எதிரானது. விரைவாக விசாரணையை நடத்த வேண்டியது அரசின் கடமையாகும்.

- உச்சநீதிமன்றத் தீர்ப்பு

### நீதி பெறுவதில் மக்கள் சந்திக்கும் தடைகள் என்ன?



கல்வியறிவின்மை, விழிப்புணர்வின்மை, வறுமை

ஆண், பெண் மற்றும் சாதிய ஏற்றத்தாழ்வுகள்





நீதிமன்றங்களை அணுகுவதற்கு போதிய பொருளாதார வசதியின்மை

நீதிமன்றங்களை மக்கள் எளிதில் அணுக வாய்ப்பின்மை



### மக்கள் நீதிமன்றம்

சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பே "**லோக் அதாலத்**" எனப்படும் "**மக்கள் நீதிமன்றம்**" ஆகும். நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விருப்பம் அல்லது தன்னிச்சையாகவோ அல்லது நீதிமன்றத்திற்கு வரும் வழக்கிலும் சமரச முறையிலோ தீர்வு காண மக்கள் நீதிமன்றங்களை நாடலாம்.



ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

குற்றம் இன்னதென்று ஆராய்ந்து எந்தப் பக்கமும் சாயாமல் நடுநிலைமை தவறாமல் வழங்கப்படுவதே நீதியாகும்

குறள்-541




காசோலை வழக்குகள், வாகன விபத்து வழக்குகள், குடும்பப் பிரச்சனைகள், தொழில் தகராறுகள், தொழிலாளர் பிரச்சனைகள், நிலம் தொடர்புடைய வழக்குகள், இழப்பீடு தொடர்பான வழக்குகள், வங்கிக் கடன், வாடகை விவகாரங்கள் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு இங்கு சமரச முறையில் தீர்வு காணப்படும். மக்கள் நீதிமன்றங்களால் கால விரையும் ஏற்படாமல் விரைந்து தீர்வு காணப்படும். வழக்கு தாக்கல் செய்ய நீதிமன்றக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. மக்கள் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் முடிவுகள் நீதிமன்ற தீர்ப்பிற்கு இணையானது.

### "சகி" ஒருங்கிணைந்த சேவை மையம்

குடும்பத்தில், வேலை செய்யும் இடங்களில், கிராமத்தில் மற்றும் பொது இடங்களில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் நிவாரணம் பெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்டதே "சகி" ஒருங்கிணைந்த சேவை மையம். பெண்கள் பலவிதமான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர்.

**பாதிக்கப்படும் பெண்களுக்கு கீழ்க்கண்ட சேவைகள் "சகி" ஒருங்கிணைந்த சேவை மையத்தில் வழங்கப்படும்**



- அவரச கால மீட்புச் சேவைகள்
- மருத்துவ உதவிகள்
- வழக்குப் பதிவில் உதவி
- உளவியல் ரீதியான ஆலோசனைகள்
- சட்டரீதியான உதவியும் ஆலோசனைகளும்
- குறுகியகால தங்குமிட வசதி

**இம்மையத்தில் யார், யார் எங்கு புகார் தெரிவிக்கலாம்?**

- பாதிக்கப்பட்டவர்கள், பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள்.
- மனித உரிமை அமைப்புகள், பெண்கள் மற்றும் சிறார் அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள்.
- மாவட்ட ஆட்சியர் கூட்டும் குறைதீர்க்கும் நாளன்று (திங்கட்கிழமை) மனு அளிக்கலாம்.
- சமூக நலத்துறை மூலம் புகார் கொடுக்கலாம்.
- காவல்துறை மற்றும் நீதித்துறை (இலவச சட்ட உதவி ஆணையங்கள்) மூலம் புகார் கொடுக்கலாம்.
- உதவி எண் "181" மூலம் புகார் கொடுக்கலாம்.

உற்றார் உறவினர்களால் துரத்தப்பட்டு, புகலிடம் தேடி வரும் பெண்களுக்கு உதவக் காத்திருக்கும் உற்ற தோழியாக இம்மையங்கள் உள்ளன. இம்மையம் 24 மணி நேரமும் செயல்படும் அமைப்பாகும்.

## பயிற்சிகள்

**1. சரியான கூற்றைத் தேர்வு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கிராமங்களில் நடைபெறும் ஊர்ப் பஞ்சாயத்துகள் மூலம் தீர்ப்பு கூறுவது | சரி | தவறு |
| 2. | கிராமக் கூட்டங்களில் அனைவரும் சமமாக மதிக்கப்படுகின்றனர். | சரி | தவறு |
| 3. | பிரச்சனைகள் எழுந்தால் நாம் காவல் நிலையத்தில் புகார் செய்ய வேண்டும். | சரி | தவறு |
| 4. | பிறர் உரிமையைப் பறிப்பது சட்டவிரோதம். | சரி | தவறு |
| 5. | பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவே நீதிமன்றங்கள். | சரி | தவறு |
| 6. | பணம், வசதி இல்லாத மக்கள் இலவச சட்ட உதவி பெறலாம். | சரி | தவறு |

**2. பாதிக்கப்படுகையில் நாம் எங்கு முறையீடுவது? சரியான விடைகளை ( 3 ) செய்யவும்.**

*1. பெண்கள், சிறுமிகள் பாதிக்கப்பட்டால் எங்கு புகார் செய்யலாம்?*

1. காவல் நிலையம் ☐
2. சகி ஒருங்கிணைந்த சேவை மையம் ☐
3. சமூக நலத்துறையின் பாதுகாப்பு அலுவலர் ☐
4. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ☐
5. பெண்கள் ஆணையங்கள் ☐
6. அனைத்தும் சரி ☐

*2. குழந்தைகள் பாதிக்கப்பட்டால் எங்கு புகார் செய்யலாம்?*

1. குழந்தைகள் சிறப்புக் காவல் துறை ☐
2. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ☐
3. இரண்டும் சரி ☐

3. ஒரு நபருக்கு மனித உரிமை மீறல் நடந்தால் எங்கு புகார் செய்யலாம்?

1.காவல் நிலையம் ☐

2. நீதிமன்றம் ☐

3. மனித உரிமை ஆணையங்கள் ☐

**3. சரியானப் பாதையைத் தேர்வு செய்**

நீதியைப் பெற சரியான பாதையைக் கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் பென்சில் கொண்டு வரையவும்.




**4. நமது உரிமையும் நமது கடமையும்**

(கீழே கொடுக்கப்பட்ட வார்த்தைகளில் உரிமைகள் மற்றும் கடமைகளைப் பிரித்துத் தனித் தனியாக எழுது)

அனைவரும் சமம், மனித மாண்பைப் போற்றுதல், அடிப்படை சுதந்திரத்தை மதித்தல், வெறுப்பு பேச்சுகளைத் தவிர்த்தல், பாகுபடுத்தாமை, பெண்கள், சிறுமிகளிடம் கண்ணியமாக நடத்தல், பிற மதத்தினரைப் புண்படுத்தாமல் இருத்தல், நம்மிடம் உள்ள வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளல்,

நல்லிணக்கத்தை வளர்த்தல், அரசமைப்புச் சட்டத்தை மதித்தல், விரைவான நீதி கிடைக்கச் செய்தல், சகோதரத்துவத்தை வளர்த்தல், ஒருவர் விரும்பிய சமயத்தைத் தழுவ, பரப்ப உரிமை, விரும்பிய தொழில் செய்யும் உரிமை, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல், பொதுச்சொத்தைப் பாதுகாத்தல்.

| | உரிமைகள் | கடமைகள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

### 5. விழிப்புணர்வுப் பதாகைகளைத் தயார் செய்யுங்கள்

1. சட்டவிரோத கட்டப் பஞ்சாயத்துகளைத் தவிர்ப்போம்!
2. இலவச சட்ட உதவி நம் உரிமை என்போம்!
3. அரசமைப்புச் சட்டமே அடிப்படை என்போம்!
4. விரைவான விசாரணை அடிப்படை உரிமை என்போம்!
5. சட்ட ரீதியான அமைப்புகளே சமத்துவத்தைப் பேணும்!
6. தாமதப்படுத்தப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்கு சமம்!
7. சட்டத்தின்முன் அனைவரும் சமம்!

# மாணவர் சாசனம்

இந்திய அரசமைப்பின் உள்ளடக்கத்தை எங்கள் வயதுக்கேற்ப புரிந்து கொண்ட மாணவர்களாகிய நாங்கள், இவ்வுள்ளடக்கத்தை மானுட வாழ்நெறியாக மாற்றிடுவோம். இந்திய அரசமைப்பு தரும் உரிமைகளை நாங்கள் வெறும் சட்டங்களாகப் பார்க்கவில்லை. அரசமைப்பு உள்ளடக்கிய அனைத்துப் பரிமாணங்களையும் ஒரு வாழ்நெறியாகப் பார்க்கிறோம். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இதனைப் பிரதிபலிப்போம் என்று நாங்கள் உறுதியேற்கிறோம்.

அரசமைப்பை இந்தியத் துணைக் கண்டத்தின் அடையாளமாகக் (Identity) கருதுகிறோம். அரசமைப்பு இந்நாட்டின் ஒப்பற்ற தத்துவம். இந்த ஒப்புயர்வற்ற தத்துவத்தைக் காப்பதில் மாணவக் குடிமக்களாகிய நாங்கள் என்றும் துணை நிற்போம் என உறுதி கூறுகிறோம். இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க, பொருள் பொதிந்த அரசியல் சாசனக் கோட்பாடுகளை வகுத்தளித்த தலைவர்களின் முயற்சிக்குத் தலை வணங்குகிறோம். இப்பெருமக்களின் கனவு நனவாகத் துணை நிற்போம் என உறுதி கூறுகிறோம்.



1. சுதந்திரம் பெற்ற இந்தியாவை மதம் சார்ந்த ஒரு நாடாக அறிவிக்காமல் சமயச் சார்பற்ற நாடாக அறிவித்த நம் அரசமைப்பு முன்னோடிகளை வியந்து பார்க்கிறோம். பல்சமயங்களைக் கொண்ட இந்தியாவில் அனைத்துச் சமயங்களையும் சமமாகப் போற்றவும், அதே வேளை இந்திய சனநாயக அரசு எந்த சமயத்தின் சார்பாகவும் இயங்காது என்ற நோக்கில் வரையப்பட்ட இந்த அரசமைப்பை உளமாரப் போற்றுகிறோம். இந்தியச் சமூகத்தின் பன்முகக் கூறுகளை மதிக்கவும் பன்முகச் சமூகத்தின் சம பங்கேற்பையும், பன்முகச் சமூகங்களின் வேறுபட்ட, தனித்த அடையாளங்களைக் காக்கவும், கூட்டாட்சி முறையைக் காக்கவும், அரசமைப்பைப் பாதுகாக்கவும் உறுதி கூறுகிறோம்.

2. சமயச் சார்பற்ற அரசு மத ரீதியாக எவரையும் பாகுபடுத்தாது என்ற உள்ளடக்கத்தைக் கொள்கையாக கொண்டது நம் அரசமைப்பு என்பதால், அனைத்து பாகுபாட்டையும் மறுத்து, சமத்துவத்தையும், சமய நல்லிணக்கத்தையும் வளர்த்தெடுக்க உறுதியேற்கிறோம்.



3. நாளைய சமூகத்தின் பொறுப்புமிக்க குடிமக்களாகத் திகழப்போகும் நாங்கள் சமயம், சாதி ரீதியாக வளர்க்கப்பெறும் வகுப்புவாத அரசியலை ஊக்கப்படுத்த மாட்டோம் என உறுதியேற்கிறோம். வகுப்புவாதம், மதவாதம், மத அடிப்படைவாதம் எனும் கருத்தியல்கள் மானுட வளர்ச்சிக்கும் மாண்பிற்கும் அறிவியல் மனப்பான்மைக்கும் எதிரானது என்பதால் இக்கருத்தியல்களை எதிர்த்து நிற்போம் என உறுதி கூறுகிறோம்.

4. இந்தியச் சமூக அமைப்பை சமத்துவ சமூகமாக அறிவித்ததைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறோம். சமத்துவ அரசு பாலினப் பாகுபாடுகளையும் சாதிய முரண்பாடுகளையும் மற்றும் பண்பாட்டு ஒடுக்குமுறைகளையும் மறுத்து அனைவருக்குமான சமூகநீதியை வலியுறுத்துவதால் ஒளிமயமான சமூகம் உருவாகும் என நம்பிக்கை கொள்கிறோம். இந்த ஒளிமயமான சமூகத்தை உருவாக்க மாணவக் குடிமக்களாகிய நாங்கள் உறுதியேற்கிறோம்.



5. சனநாயகத்தின் முக்கிய உள்ளீடான பங்கேற்பு உரிமையை வளர்த்தெடுக்க நாங்களும் பாடுபடுவோம். பொருளாதாரம், சமூகம் என்ற அளவில் பிளவுபட்ட சமூகத்தில் அனைவரும் அரசமைப்பு தரும் வழியில் சனநாயக அரசு உருவாகிட உரிய பங்கேற்பை வழங்கிட துணைநிற்போம்.

6. சனநாயகத்தின் மிக உயரிய பண்பான வாக்குரிமையின் மேன்மையைப் புரிந்து கொண்டுள்ளோம். சனநாயக அரசை ஆட்சி செய்ய மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் முறையை செயல்படுத்த ஒத்துழைப்போம். தேர்தலில் சமூகத்தின் அனைத்து தரப்பினரும் சமமாகப் பங்கேற்கவும் துணை நிற்போம் உறுதி ஏற்கிறோம்.

7. இந்தியச் சமூகத்தின் பன்முகப் பண்பையும் வேற்றுமையில் ஒற்றுமையையும் வலியுறுத்தும் சனநாயகத்தைப் பேணுவோம் என்று உறுதி கூறுகிறோம். சனநாயகத்தை உயரிய மதிப்பீடாகப் புரிந்து கொண்டிருக்கும் மாணவர்களாகிய நாங்கள் சனநாயகத்தை ஒரு பண்பாடாக வளர்த்தெடுக்க தொடர்ந்து துணை நிற்போம் எனவும் உறுதி அளிக்கிறோம்.




8. இந்தியச் சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையைக் களைய முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் துணை நிற்போம். சாதியத்தின் பெயரால் நிகழ்த்தப் பெறும் அனைத்து வன்முறை களையும் தடுத்து நிறுத்த சட்டப்படியான வழிகளில் தலையீடு செய்யும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வோம் என்றும் உறுதி கூறுகிறோம்.

9. மானுடரின் வாழ்வு, சமத்துவம், அவர்தம் மாண்பு எனும் உரிமைகளைக் காத்திடும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள உரிமைக் காப்பு அமைப்புகளை உரிய வகையில் செயற்படச் செய்வோம் எனவும் அரசமைப்புச் சட்டம் தந்த உரிமைக் கவசங்களின் வழி, சட்டத்தின் ஆட்சியைக் காக்க துணை நிற்போம் எனவும் உறுதி ஏற்கிறோம்.




10. மக்களின் பங்கேற்போடு உருவாகும் நாடாளுமன்ற சனநாயகம் எக்காலத்திலும் சர்வாதிகார அரசாக மாறாமல் காப்போம் என உறுதி கூறுகிறோம். இந்திய அரசமைப்பின் விழுமியங்களை அடையாளங்கண்டு வளர்த்தெடுக்க உறுதியேற்போம்.

அரசமைப்பு உறுதியளிக்கும் உரிமைகளையும் உரிமைக் கவசங்கள் பற்றிய புரிதலையும் வகுப்பறைக்கு வெளியே எங்கள் குடும்பங்களில், நண்பர்களிடத்தில், வழிபாட்டுத் தளங்களில், ஊடகங்கள் மற்றும் ஏனைய மாணவர் கூடுகைகளில் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குவோம். இந்தியாவுக்கென்று ஓர் அரசமைப்பை உருவாக்கிட தம்மை அர்ப்பணித்த நம்முன்னோர்களை நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.



அரசமைப்பு தாங்கி நிற்கும் மனித உரிமைகளையும் மானுட மதிப்புகளையும் வாழ்நெறியாக்க எச்சூழலிலும் என்றும் துணை நிற்போம்.

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக்
குழந்தைகளுக்கான

# உறுதிமொழி

**அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினராகிய நான்,**

- இந்திய அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் சமத்துவம், சமூக நீதி, சமதர்மம், சனநாயகம், சமயச் சார்பின்மை, பன்மைத்துவம் போன்ற உன்னத மதிப்பீடுகளை உயிர் மூச்சாக மதிப்பேன்.
- சாதி, சமயம், இனம், நிறம், பாலினம், மொழி, பிறப்பிடம், தகுநிலை போன்ற எவற்றின் அடிப்படையிலும் யாரிடமும் ஒருபோதும் பாகுபாடு காட்டமாட்டேன்.
- ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அனைவரோடும் சமமாகப் பழகுவேன்.
- எவ்வகையான சுரண்டலையும், ஆதிக்கத்தையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.
- எந்தச் சூழ்நிலையிலும் வன்முறையில் ஈடுபடமாட்டேன்.
- அரசமைப்பு உறுதிப்படுத்தும் தனிமனித உரிமைகள் உள்ளிட்ட பிற அடிப்படை மனித உரிமைகளை மதித்து நடப்பேன்.
- அரசமைப்பின்படி குடிமக்களுக்கு உள்ள அனைத்து கடமைகளையும் என்னளவில் உளப்பூர்வமாக நிறைவேற்றுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.

**குழந்தைகளுக்கான**
**அரசமைப்பு உரிமைக் கல்வி**

**Constitutional Rights Education Programme (CRE)**

# குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி

“அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்!” என்ற முழக்கத்தோடு வான்முகில் அமைப்பு குழந்தைகள் மத்தியில் அரசமைப்பு உரிமைக் கல்வியை முன்னெடுத்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் மதிப்பீடுகளையும், அது உத்திரவாதப்படுத்துகிற அடிப்படை உரிமைகளையும் குழந்தைகள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்; சமூக அக்கறையும் நல்ல மனித மதிப்பீடுகளும் கொண்ட குடிமக்களாக இவர்கள் உருவாக வேண்டும் என்ற உயரிய நோக்கில் இவ்வுரிமைக் கல்வி கொண்டு செல்லப்படுகிறது. பள்ளிகளில், வகுப்பறைகளில், விடுதிகளில், வீதிகளில், விளையாட்டு அரங்கங்களில், சமூகத் தளங்களில் இத்தகைய மதிப்பீடுகள் வெளிப்பட வேண்டும் என்ற பெருங்கனவுகளோடும் பேரார்வத்தோடும் உந்தித் தள்ளப்பட்டு, இம்முன்னெடுப்பு பலருடைய ஒத்துழைப்பில் உருவானது.

கடந்த ஆண்டு தமிழகம் – புதுவையில் 17 மாவட்டங்களில் 150 கிராமங்களில் 10 குடிமைச் சமூக அமைப்புகளின் உதவியோடு குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இக்கல்வித் திட்டத்தை பள்ளிகளிலும் விடுதிகளிலும் கொண்டு செல்லும் ஆக்கப்பூர்வ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏழாம் வகுப்பு பயிலும் குழந்தைகளை மையப்படுத்தி, ஆறு பாடங்களை உள்ளடக்கிய “இந்தியக் குடிமக்களாகிய நாம்” எனும் இரண்டாவது பாடநூல் மிக எளிமையாகவும், பல்வேறு செய்முறைப் பயிற்சிகள், கதைகள், வரலாற்று மற்றும் உண்மை சம்பவங்கள், கலந்துரையாடல்கள் வழியாக குழந்தைகளுக்கு புரியும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு கல்வியாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சமூக அக்கறை கொண்ட ஆசிரியப் பெருமக்களின் பங்களிப்பு இதன் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தது. இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களிலும் உள்ள முக்கியமான உரிமை சார்ந்த பிரிவுகள் இப்பாடநூலில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. இப்பாடநூல் அச்சு வடிவில் மட்டுமல்லாது, மின்னணு வடிவிலும் வெளிவருகிறது.

வான்முகில்
திருநெல்வேலி

**வான்முகில்**

அரசமைப்பு உரிமைக் கல்வி

15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல், திருநெல்வேலி

தொடர்பு கொள்ள : 94426 18117, 99943 68503

மின்னஞ்சல்: vaanmuhil@gmail.com